878

"கம்ப நிலய"ப் பிரசுரம் - ௬

# தன்னம்பிக்கை

இஃது

எமர்ஸன் எழுதிய ஆங்கில வியாசத்தினின்று

சந்திரகுப்தன் சரித்திரம், மங்கையர்க்கரசியின் காதல்
முதலிய கதைகள், புக்கர் வாஷிங்டன் முதலிய
நூல்களின் ஆசிரியரான

**வ. வே. ஸுப்ரஹ்மண்ய ஐயரால்**

மொழிபெயர்க்கப்பட்டது.

"கம்ப நிலயம்," புதுச்சேரி.

சகம் ௧௮௪௨

விலை அணா எட்டு.

உ

நம்பர் 746 சிவமயம்.

# தன வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்,
## திருவள்ளுவர் நூல் நிலையம்,
## பாகனேரி.

இஃது

ஸ்ரீமான் [illegible] அவர்களால்
இனாமளிக்கப்பெற்றது.

............ ஆண்டு ............ திங்கள் ............ நாள்

தயவு செய்து பேணிப் படியுங்கள்.

"கம்பநிலய"ப் பிரசுரம் - ௬

# தன்னம்பிக்கை

இஃது

எமர்ஸன் எழுதிய ஆங்கில வியாசத்திலிருந்து

சந்திரகுப்தன் சரித்திரம், மங்கையர்க்கரசியின் காதல்
முதலிய கதைகள், புக்கர் வாஷிங்டன் முதலிய
நூல்களின் ஆசிரியரான
வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயரால்
மொழிபெயர்க்கப்பட்டது.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

"கம்ப நிலயம்," புதுச்சேரி.

சகம் ௧௮௪௨

விலை அணா எட்டு.

மறுபதிப்புரிமை பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

சைகோன் சின்னையா அச்சுக்கூடம், புதுவை.

# முகவுரை

3486

இந்த நூலானது ரால்ப் வால்டோ எமர்ஸன் என்ற அமெரிக்க மகா பண்டிதன் ஆங்கிலத்தில் எழுதிய ஸெல்ப்ஹ் ரிலையன்ஸ் என்ற வியாசத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும்.

கி. பி. பத்தொன்பதாவது நூற்றாண்டில் ஜடசாஸ்திராபிவிருத்தியால் பெருகிவிட்ட போகவஸ்துக்களின் அனுபவத்தில் மூழ்கி அதனால் அறிவு மறந்துபோய் விட்ட அமெரிக்க, ஆங்கிலேய ஜாதியார்களுக்கு ஔஷதமாக ஏற்பட்டவை, இவனும், இவனுடைய குருவான தாமஸ் கார்லைலும், ருஸ்கின் என்பவனும் எழுதிய நூல்களும் வியாசங்களுமே. இம் மூவருள் இவனிடம் தான் அறிவின் சமதை இருந்தது. கார்லைல் எழுதுவதானது உலகம் அனைத்தையும் பள்ளிக்கூட மாணாக்கராகவும், தன்னை அவர்களுக்குப் போதிக்கும் உபாத்தியாயனாகவும் பாவித்து எழுதுவதுபோல இருக்கும். அவனுடைய நூல்களைப் படிக்கும்போது, உபாத்தியாயனானவன் விட்டத்தில் கோதண்டத்தை மாட்டி, கையில் பிரம்பை வைத்துக்கொண்டு பக்கத்தில் நின்றுகொண்டு, "நான் சொல்லுகிறதை ஏற்றுக்கொள்ளுகிறீர்களா, அல்லது இந்தப் பிரம்பால் முதுகுப்பட்டையை வாங்கிக் கோதண்டத்தில் ஏற்றி விடட்டுமா?" என்று கர்ச்சிப்பது போலிருக்கும். ருஸ்கினுடைய நடை மிகவும் அழகானது. ஆனால் அவனுடைய அறிவு பெண்சுபாவமுள்ளது. அவனுடைய நூல்களில் சுத்தமான பௌருஷம் கிடைப்பது அரிதாயிருக்கும். எமர்ஸனிடத்திலோ காம்பீரியம் ஆவேசமான உப்புதலின்றியும், சொல்நயம் பிரௌட கதிக்கு இடையூறின்றி

யும் பொலிந்திருக்கும். அவனுடைய நூல்களின் போக்கானது, ஒரு அறிவு நிரம்பிய சகோதரன் வீரமார்க்கத்தில் பிரவேசியாத அல்லது வீரமார்க்கத்தினின்றும் வழுவிவிட்ட தன் சகோதரரை அழைத்து வைத்துக்கொண்டு, "உங்களுடைய இயற்கை தீரமார்க்கத்தை நாடுகிறது; இதோ பாருங்கள், இதுதான் தீரமார்க்கம்; இதன் வழியாய்ச் சென்றால் எத்தனை சுகமாயும் கௌரவமாயும் இருக்கும்; இனிமேல் நாம் எல்லாரும் இதையே பின்பற்றி நடப்போம்!" என்று சொல்லுவதுபோல இருக்கும்.

எமர்ஸன் மகா பண்டிதன் என்றோம். உலகத்தில் உத்கிருஷ்டமான கிரந்தங்கள் என்று எவை எவை இருக்கின்றனவோ அவை அனைத்தையும் படித்து அவைகளின் சாராம்சம் முழுவதையும் அவன் கிரகித்தவன். நமது வேதங்கள், விஷ்ணுபுராணம், மனுதர்மசாஸ்திரம், பகவத்கீதை, ராமாயணம், மகாபாரதம், சாகுந்தலம்; முகம்மதியரின் குரான்ஷெரீப்; யூதருடைய வேதமும் தால்மூதும்; கிறிஸ்தவ வேதமும், கிறிஸ்தவ சங்கப் பிரமுகர்களின் நூல்களும்; ஜெர்மானியரின் நீபுலிங்கன் லீத்; ஸ்காந்திநேவியரின் சாகைகள்; கிரேக்க, ரோம, ஆங்கில, பிரெஞ்சு, ஜெர்மானிய, இத்தாலிய, பாரசீக, அராபிய காவியங்களும் நூல்களும்; ஐரோப்பிய யோகிகளென்ன சித்தர்களென்ன இவர்களுடைய அருள்வாக்குகள்; ஆகிய இவை அனைத்தினின்றும் அவன் மேற்கோள்கள் எடுத்துத் தன் வியாசங்களை அழகுபடுத்தியிருக்கிறான்.

சாமானியப் பண்டிதரும் மேற்கோள்கள் எடுத்துக் கையாடுகிறார்கள். ஆனால் மேற்கோள்களை விட்டுவிட்டால்

அவர்களுடைய வாக்கில் சாராம்சம் ஏதும் இராது. எமர்ஸன் ஆளும் மேற்கோள்களையோ என்றால், அவை எப்பேர்ப்பட்ட நூல்களினின்று எடுக்கப்பட்டவையாக இருந்தாலும் சரி, மேற்கோள் குறிகளினால்தான் அவைகளை மேற்கோள்கள் என்று அறியலாமே ஒழிய, அவனுடைய வாக்குக்கும் அவைகளுக்கும் உள்ள உயர்வுதாழ்வினால் ஒருபோதும் அறியமுடியாது. அவனுடைய வாக்கு அவ்வளவு உயர்ந்ததாக இருக்கும்.

அவனிடமே ஒரு ரிஷியின் தேசு விளங்கிற்று என்பர். அவனுடைய அறிவு உயர்ந்த உலகங்களில் தான் சஞ்சரிக்கும். தவிர, சாதாரண மனிதருக்குப் புலப்படாத சம்பந்தங்கள் அவனுடைய கண்ணுக்குத் தெளிவுபடத் தெரியும். அவனுடைய அறிவும் அதிவிரைவாகச் செல்லும். ஆகையால் அவன் தன் வியாசங்களில் சில வேளைகளில் ஒரு விஷயத்திலிருந்து மற்றொரு விஷயத்துக்குப் படிப்படியாய்ச் செல்லாமல், நடுவிலுள்ள படிகளை விட்டுவிட்டு ஓரே அடியாய்த் தாண்டிவிடுவான். ஆனால் இது முதலில் வாசிப்போருக்குச் சிறிது கஷ்டமாயிருப்பினும் நடைக்கு ஒரு காம்பீரியத்தைக் கொடுக்கிறது.

எமர்ஸன் தன் வியாசங்கள் மூலமாகத் தர்மோபதேசம் செய்தான் என்று சொன்னோம். அவன் ஆயுள் முழுவதிலும் செய்துவந்த உபதேசங்களின் சாராம்சம் அனைத்தும் இந்தத் தன்னம்பிக்கை என்னும் வியாசத்தில் பொதிந்து கிடப்பதால் அதையே இப்பொழுது மொழிபெயர்க்கிறோம். தமிழ் நாட்டாருக்கு இவனுடைய மற்ற வியாசங்களைப் பார்க்கவேண்டும் என்கிற ஆசை

இருக்கிறது என்று தெரியவருமாயின் அவைகளேயும் ஒன்ருென்ருய் மொழிபெயர்த்துப் பிரசுரிப்போம்.

தமிழ் மாத்திரம் அறிந்தவர்களுக்குத் தெரியாத அனேக நூலாசிரியர்களேயும், நூல்களேயும், மற்றுமுள்ள விஷயங்களேயும்பற்றி எமர்ஸன் தன் வியாசத்தில் தாராள மாய்ப் பேசுவதால், அவ் ஆசிரியர், நூல்கள் முதலிய வற்றைப்பற்றி இந்நூலில் அறியவேண்டிய அமிசங்களேப் புத்தகத்தின் இறுதியில் அகராதியாகச் சேர்த்திருக்கும் குறிப்புகளில் விளக்கியிருக்கிருேம். நூலில் இத்தன்மை யான சிறப்புப் பெயர்கள் வரும்போது படிப்போர் அவ் அகராதியைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். கூடிய விரைவில் மேல்நாட்டு இலக்கியங்களெல்லாம் எங்களா லும் பிறராலும் தமிழில் பதிப்பிக்கப்பட்டு வெளிவரப் போகின்றன வாகையால் இச் சிறப்புப் பெயாகராதி அவைகளேப் படிக்குமவர்க்கும் பயனுகுமாறு சற்று விரி வாகவே எழுதப்பட்டிருக்கிறது.

எமர்ஸனுடைய கொள்கைகள் அனேக அமிசங் களில் நமது வேதாந்தக் கொள்கைகளே ஒத்திருப்பதால், விசேஷமான பொருத்தங்கள் காணுமிடங்களில் மொழி பெயர்ப்பாசிரியன் உபநிஷத்துக்கள், கீதை, சித்தர்களின் நூல்கள் முதலியவற்றினின்று மேற்கோள்கள் எடுத்து அடிக்குறிப்புகளில் சேர்த்திருக்கிருர் என்று படிப் போருக்கு இங்கு தெரிவிக்கிருேம்.

“ கம்ப நிலயம் ”

3486

# தன்னம்பிக்கை

*நினக்குப் புறம்பாக இருக்கும் எதையும் நாடாதே.*

ஆகூழ்* என்பது மனிதன் உள்ளமே.
நேர்மை சான்றாண்மை என்பன வளர்த்திடும்
உள்ளம்தனக்கு இவ் உலகும், சோதியும்,
விதியும்—எல்லாம் அடிமையே என்ப.
ஏது வந்திடினும், எப்போ வந்திடினும்,
பொல்லாப் பொழுதினில் வந்தன என்று
வல்லவன் சோர்ந்திடான். தெய்வம் என்பது—
நல்லவோ, தீயவோ—நம்முடை வினைகளே,
யாங்கணும் நம்முடன் செல்லும் நீழலே.

—போமண்டும் பிளெச்சரும் எழுதிய "ஒரு யோக்கியனுடைய சுகதுக்கங்கள்" என்னும் நாடகத்தின் பின்னுரை.

பிள்ளையைப் பாறைமீது அஞ்சாது இடுக!
செந்நாய்ப் பால் அருந்தி அவன் வளர்க!
நரியொடும் பருந்தொடும் நாள்தொறும் பழகி
உரமும் ஓட்டமும் அவற்கு இயற்கை ஆகுக!

அன்றொருநாள் ஒரு பெரிய சித்திரக்காரன் எழுதிய பாக்கள் சில என் கண்ணில் பட்டன. அவை வழக்கமாக வெளிவருகிற கவிகளைப் போன்றில்லை: அவைகளில் ஒரு புதுமை இருந்தது. இப்படி கவியின் இருதயத்தி

* அதிர்ஷ்டம்.

னின்று சுவயமாகப் பெருகும் செய்யுள்களின் விஷயம் எதுவாக இருந்தாலும், அவைகளுக்கு அறிவைத் தட்டி எழுப்பிவிடும் குணம் அவசியம் இருக்கிறது. அவைகளின் வெளிப்பொருளைவிட அவைகளின் பாவம், உட்கருத்து, உயர்ந்ததாக இருக்கிறது. தன் அறிவிலே பிறக்கும் எண்ணங்களை மதித்தல், தன் இருதயத்தி னுள்ளே உண்மை என்று கொள்ளப்படும் பொருள் மனிதஜாதி அனைத்துக்குமே உண்மைதான் என நம்புதல், இதுதான் மேதை, இதுதான் பேரறிவு. உன் அந்தராத்மாவில் எழுகின்ற எண்ணத்தை வெளியிட்டுவிடு: அதுவே காலத்தில் சர்வஜன மதமாக மாறிவிடும். ஏனெனில் உள்ளுக்குள்ளே சஞ்சிதமாக இருக்கிற சிந்தனை காலக்கிரமத்தில் விவர்த்தமாகி, சர்வபகிரங்க மாகிவிடுகிறது. நம்முடைய ஆதி எண்ணங்களே ஊழியின் இறுதியில் நம்மிடம் வந்து சேருகின்றன.

நம் அறிவினுள்ளே பிறக்கும் வாக்குகளை நாம் அனைவரும் கேட்டிருக்கிறோம். ஆனால் மோஸெஸ், பிளாத்தன், மில்டன் முதலியவர்களுக்கு நாம் கொடுக்கும் கௌரவம் எதற்காக என்று பார்த்தால், அவர்கள் புஸ்தகங்களையும் சம்பிரதாயங்களையும் தூரத் தள்ளிவைத்துவிட்டு, மற்றவர்களுடைய சிந்தனைகளை வைத்துக்கொண்டு பேசாமல், தங்கள் உள்ளத்தினின்று பெருகிய உணர்வுகளையே வெளியிட்டார்கள் என்பதற்காகத் தான். ஒவ்வொருவனும், கவிகளின் வாக்குகளையும் ஞானிகளின் வாக்குகளையும் கவனிக்கிற கவனத்தைவிட அதிகமான கவனத்தோடு, தன் சித்தத்தினுள்ளே மின்னல் வெட்டுவது

போலத் தோன்றி மறையும் சோதிக்காகக் கண்கொட்டா மல் காத்திருந்து, அது தோன்றினதும் அதைப் பிடித்து வைத்துக்கொள்ளக் கற்றுக்கொள்ளவேண்டும். ஆனல் எல்லோரும், தங்களது என்கிற காரணத்தாலேயே தங் கள் எண்ணங்களை மதிக்காமல் விட்டுவிடுகிறார்கள். அரிய நூல்கள் ஒவ்வொன்றிலும் நாம் நமது சித்தத்தினின்று வேண்டாம் என்று ஓட்டிவிட்ட எண்ணங்கள் எத்தனை யையோ நாம் காண்கிறோம். நம்மால் திரஸ்காரம் செய் தனுப்பப்பட்டவர் தாங்கள் சுவயமாகச் சம்பாதித்த கௌரவங்களைத் தாங்கிக்கொண்டு நம்மிடம் திரும்பி வருகையில் நமக்கு எவ்வளவு நாணமாக இருக்கிறது? அத்தனை நாணம் நமக்கு உண்டாகிறது, நாம் தள்ளி விட்ட அந்த எண்ணங்களை அப் பெரிய நூல்களில் நாம் பார்க்கும்போது. பெரிய காவியங்களினின்று நாம் கற்றுக் கொள்ளக்கூடியது வேறு ஒன்றும் இல்லை: நமது அறிவில் தானே எழுகின்ற சிந்தனைகளையும் உணர்ச்சிகளையும் விடாமல் பிடிவாதத்தோடு பிடித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்பதே. முக்கியமாக, நம்மை எதிர்ப்போர் அதிகமான கூச்சலிடும்போது நம்முடைய பிடிவாதமும் வலியதாயிருக்கவேண்டும் என்று பெரிய நூல்கள் நமக்கு உணர்த்துகின்றன. அப்படிக்கில்லாவிடில் நாம் கால மெல்லாம் நினைந்தும் உணர்ந்தும் வந்திருக்கிற விஷயத் தையே நாளைக்கு வேறு ஒருவன் நல்லறிவால் தூண்டப் பட்டு அற்புதமாகச் சொல்லிவிடுவான். நாமும் நம் முடைய எண்ணத்தையே அன்னியனிடமிருந்து தலை குனிவுடன் ஏற்றுக்கொள்ளவேண்டியதாக இருக்கும்.

அசூயைப்படுவது அறியாதார் தொழில்; சுய அறிவை விட்டு, வேறு ஒருவன் செய்திருக்கும் நூலை அனுகரித்து ஒரு நூலை எழுத முயலுவது கேவலம் தற்கொலை; நல்லதோ, தீயதோ, நம்முடைய உள்ளத்தையே தான் நாம் நமது ஆஸ்தியாகக் கொள்ளவேண்டும்; இந்த அகண்டமான பிரம்மாண்டத்தில் எங்குபார்த்தாலும் செல்வம் நிரம்பியிருந்தும், பயிர்செய்ய என்று நமக்கு ஈசுவரனால் கொடுக்கப்பட்டிருக்கும் சிறியபூமியை நெற்றி வேர்வை நிலத்தில் விழும்படி உழுது பயிரிட்டாலொழிய ஒரு மணி நெல் கூட நமது கைக்கு வராது;—என்கிற இந்த உண்மைகள் ஒவ்வொரு ஆசிரியனுக்கும் ஒரு காலத்தில் மனதில் பதிய ஆரம்பிக்கிறது. காரணமின்றி அன்று, ஒரு முகம், ஒரு குணம், ஒரு விஷயம் ஒருவனுடைய மனதைக் கவருகிறதும், வேறொன்று கவரச் சக்தியற்றதாக இருப்பதும். அவனுடைய நினைவினுள்ளே வெட்டப்படும் இந்தச் சிற்பத்திற்கும் அவனுடைய இயற்கைக்கும் முன்னதாகவே சம்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எண்ணில்லாத கதிர்களையுடைய பரஞ்சோதியின் ஒரு கதிர்மாத்திரம் வீழும் இடத்தில் இந்தக் கண் அமைக்கப்பட்டிருப்பதன் காரணம், அது அந்த ஒரு கதிரைப் பற்றிய உண்மையைமாத்திரம் உலகினுக்கு எடுத்துரைக்க வேண்டுமென்பதே. நமக்குள் எழும் சிந்தியங்களுள் ஒரு பகுதியைத்தான் நாம் வெளியிடுகிறோம். நாம் ஒவ்வொருவரும் எந்த அநிர்வசனீயப் பொருளின் சின்னமாக இருக்கிறோமோ அந்தப் பொருளை வெளியிட நாம் வெட்கப்படுகிறோம். அதை மாத்திரம் உள்ளது உள்ளபடியே

நாம் வெளியிட்டோமானால், நமது வாக்கில் ஒரு தகுதியும் செழுமையும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கடவுள் பயங்காளிகளுக்குத் தன் சிருஷ்டியின் பெருமையைப் பிரகாசப்படுத்தும் சக்தியைத் தருவதில்லை. தான் செய்யப்புகும் நூலில் கருத்து முழுவதையும் செலுத்தி, தன் சக்தி அனைத்தையும் பிரயோகிக்கும்போதுதான் ஆசிரியனுக்குப் பரிசிராந்தியும் உற்சாகமும் பிறக்கிறது. அப்படிச் செய்யாமல் வேறு என்ன செய்தாலும் அவனுக்குச் சமாதானம் வருவதில்லை. மனதினுள்ளிருப்பது வெளியில் வந்து விட்டும், அதினின்று அவனுக்குச் சுவாஸ்தியம் பிறப்பதில்லை. அவன் அரைமனதோடு முயற்சியில் இறங்கும்போது அவனுடைய அறிவு அவனைவிட்டு அகன்றுவிடுகிறது; எந்தத் தேவதையும் அவனுக்குத் துணைபுரிகிறதில்லை; கற்பனை எழுகிறதில்லை; நம்பிக்கையே அவனைவிட்டுப் போய் விடுகிறது.

நீ வலியுள்ளவன் என்கிற நம்பிக்கை உன்மனதில் எப்பொழுதும் நிரம்பியிருக்கட்டும்: அந்தத் தன்னம்பிக்கையாகிற இருப்புக் கம்பியின் நாதத்திற்கு எல்லா இருதயங்களும் அனுநாதம் செய்யும். உனக்கென்று கடவுள் ஏற்படுத்தி வைத்திருக்கிற ஸ்தானத்தையும் உன் காலத்தவருடைய சம்சர்க்கத்தையும், உன் காலத்தின் ரீதியையும் நீ மனப்பூருவமாக ஏற்றுக்கொள். மகான்களெல்லாம் எப்பொழுதும் இவ்விதமேதான் செய்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் காலத்து யுகதேவதையின் பாதாரவிந்தங்களில் சிசுப்பிராயமாக விழுந்து சரணாகதி செய்து

விடுவார்கள். ஆனால் அவர்கள் நிற்கும் நிலையைப் பார்த்தால், பாரமார்த்திகமான சத்தியமானது தங்களுடைய இருதயத்திலேதானே இருந்து, தங்கள் மூலமாகவே இயங்கி, தங்கள் ஜீவனை ஆக்கிரமித்துக்கொண்டே இருக்கிறது என்ற உணர்ச்சி அவர்களுடைய இருதயத்தில் சதா இருந்துகொண்டிருக்கிறது என்று தோன்றும். நாமும் ஆண்பிள்ளைகளே; வீட்டுக்குள்ளே பதனமாகப் போர்த்திவைக்கப்பட்டிருக்கிற நோயாளிகள் அல்லேம்; சிறுபிள்ளைகள் அல்லேம்; ஒரு யுகப்பிரளயத்தைக் கண்டு பயந்தோடும் பேடிகள் அல்லேம்; ஆனால் சர்வசக்தியின் ஆக்கினையைச் சிரசில் ஏற்று, பேரிருள் மூடிய அவியக்தத்தின்பேரில் படையெடுக்கச் செல்லும் முனைவீரர்களாக்கும், உத்தாரகர்களாக்கும், வள்ளற்றன்மை நிரம்பியவர்களாக்கும் நாம்! ஆதலால், அந்த மகாத்மாக்களுக்கு ஏற்பட்டிருக்கிற அநிர்வசனீயமான வைபவத்தை நாமும் நமது அந்தராத்மாவுக்குள்ளே நாடுவோமாக!

பாலர்கள், கைக்குழந்தைகள், ஏன், மிருகங்கள் முகத்திலும் நடையிலும் கூட நமக்கு எத்தனை படிப்பினைகள் வைத்திருக்கிறாள் பிரகிருதி இவ் விஷயத்தைக் குறித்து! நம்முடைய நிர்ணயமில்லாத, வசப்படாத மனம் அவர்களிடமில்லை. தங்கள் கருத்துக்களுக்குத் தடையாக இருப்பவைகளின் வலிமையைப் புள்ளிபோட்டுப் பார்த்து, இந்தக் கருத்து பலியாது என்று பின்வாங்கும் சிறுமையும் அவர்களிடமில்லை. அவர்கள் மனதில் சோர்வு புகுவதில்லை, ஆகையால் அவர்களுடைய விழியில் எந்நாளும் தோல்வியே கண்டிராத வீரியம் விளங்குகிறது: அவர்

களை நாம் உற்று நோக்கும்போது நமது முகம் வெட்கிப் போய்விடுகிறது. குழந்தைகள் எதையும் லக்ஷியம் செய்வதில்லை: மற்றெல்லோரும்தான் அவர்கள் போகும் போக்கின்படி போகவேண்டும். சாதாரணமாக, ஒரு குழந்தை தன்னோடு கொஞ்சி விளையாடுகிற நாலு ஐந்து பேர்வழிகளுக்கு ஈடுகொடுக்கும். அவ்விதமே வாலிபரும் யுவாக்களும் வேறொருவர்மீதும் சாயாமல் தம்மைத் தாமே ஆதாரமாகக்கொண்டு நிற்கும் பக்ஷத்தில் ஈசுவரன் அவர்களுக்கு ஓர் சிறந்த வனப்பும் தீக்ஷண்யமும் ஒயிலும் அளிக்கிறான். பார்ப்போரெல்லாம் அவர்களுடைய குணத்தை அவாவுவார்கள். அவர்களுடைய யோக்கியதைக்குரிய சீர்த்தி அவர்களைக் கட்டாயம் வந்து அணையும். உன்னிடமும் என்னிடமும் பேசத் தெரியவில்லை என்பதனால், அதோ அங்கே இருக்கிறானே அந்த வாலிபனிடம் சக்தியே இல்லை என நினைத்துவிடாதே. அடுத்த அறையில் அவனுடைய குரல் என்ன தெளிவாக, என்ன கணீர் என்று, கேட்கிறது பார்! தன் காலத்து மனிதரோடு பேச அவனுக்குத் திராணி உண்டு என்று தோன்றுகிறது. அப்படியானால், அவன் தற்காலத்தில் நாணமுள்ளவனாயிருந்தாலும் சரி, சகஜமான தைரியமுள்ளவனாக இருந்தாலும் சரி, மூத்தோராகிய நம்பேரில் சாயாமல் சுவதந்திரனாக நிற்க அவனுக்குத் தெரிந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

சாப்பாட்டு விசாரமில்லாத சிறுவர்கள், ஒருவனைப் பார்த்து நையப்பாட்டுப் பாடுவதைத் துச்சமென நினைக்கும் சிறுவர்கள், இவர்களுடைய அலக்ஷியதை இருக்கிறதே

அதுபோலத் தான் இருக்கவேண்டும் மனிதனுடைய சுபாவம். நாடகசாலைகளில் தரைப் பேர்வழிகள் எப்படியோ அப்படித்தான் வீட்டுக்குள்ளே சிறுவன்: அவனுக்கு யாரும் லக்ஷியமில்லை; எதற்கும் அவன் கட்டுப்படுகிறதில்லை; அவன் பார்வைக்குள் வருகிற சகலரையும் அவன் ஜட்பட் டென்று நிறுத்துப் பார்த்து, அவர் அவர்களுடைய யோக்கியதைக்குத்தக்கபடி இவன் யோக்கியன், இவன் அயோக்கியன், இவனிடத்தில் சரக்கு இருக்கிறது, இவன் முண்டம், இவன் வாசாலன், இவன் சள்ளைப் பேர்வழி, என்று அவர்களுக்குப் பேர் வைத்து விடுகிறான். பின்னால் வருவதைப்பற்றி அவன் யோசிப்பதில்லை, லாபாலாபங்களைப்பற்றி அவன் கருதுகிறதில்லை. பாரபக்ஷமில்லாத அயனான தீர்ப்பு அவனுடைய தீர்ப்பு. நீதான் அவன் தயவைக் கோர வேண்டுமே ஒழிய அவன் உன் தயவை வேண்டுவதே இல்லை. ஆனால் கிரகஸ்தனோ அவ்வித மிருப்பதில்லை: அவனுடைய பகுத்தறிவு அவனுக்கு ஒரு காராக்கிரகம்போ லாகிவிடுகிறது. நாலு பேர் மெச்சும்படி அவன் ஏதாவது பேசிவிட்டால், ஏதாவது செய்துவிட்டால் போதும், மனிதன் அது முதல் கட்டுப் பட்டவனாய்விடுகிறான். "என்பேரில் அபிமானத்துடனோ அல்லது எரிச்சலுடனோ நூற்றுக்கணக்கான ஜனங்கள் என்னைக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள்; ஆகையால் அவர்களுடைய அபிப்பிராயங்களுக் கேற்ப நான் நடந்து கொள்ளவேண்டும்," என்று அவன் தனக்குள் நினைத்து விடுகிறான். அவனுக்கு இதை மறக்க முடிகிறதே இல்லை. ஐயோ பாவம், முன்னிருந்த சமதிருஷ்டியை அவன்

திரும்பப் பெற்றுவிடக்கூடாதா? உலகானுபவம் ஏற்பட்ட பிறகும் கூட யாதொரு கட்டுக்கும் அகப்படாமல், மயக்கமும் பக்ஷபாதமுமற்ற, நயத்தாலாவது பயத்தாலாவது மாற்றிவிட முடியாத, நிஷ்களங்கமான கண்ணோடு எவனொருவனுக்குச் சகலத்தையும் பார்த்தல் சாத்தியமோ அவனைக் கண்டு உலகம் நடுங்கும். அவன் பொது விஷயங்கள் எல்லாவற்றையும் பற்றித் தான் சொந்த அபிப்பிராயங்களை வெளியிட அஞ்சமாட்டான். அவ் அபிப்பிராயங்கள் சுய நய நோக்கத்துடன் சொல்லப்பட்டன அல்ல, சத்தியமானவை, என்று ஜனங்களுக்குத் தெரியுமாகையால் அவை அவர்கள் காதில் அம்புபோலப் போய்த் தைக்கும், அவைகளுக்கு அவர்கள் அஞ்சுவார்கள்.

இது போன்ற வாக்குகள் நாம் ஏகாந்தமாக இருக்கும்போது நமக்குள் பிறக்கின்றன. ஆனால் நாம் விவகாரங்களில் இறங்கும்போது அவைகளின் நாதம் அடங்கி விடுகிறது. மனிதனுடைய ஆண்மையை அடக்கிவிட அவனைச்சுற்றியுள்ள ஜனசமூகமே பொறுமையோடு பார்த்துக்கொண்டிருக்கிறது. ஜன சமூகம் ஒரு கூட்டுச் சீட்டுச் சங்கம். சங்கமானது ஒவ்வொரு பங்காளிக்கும் வயிற்றுச் சோற்றுக்காக ஒரு நிரந்தரமான ஏற்பாட்டைச் செய்துவைக்கவேண்டியதென்றும், அதற்கு எதிர் வரிசையாகப் பங்காளிகள் தங்கள் தங்கள் சுதந்தரத்தையும் பயிற்சியையும் தத்தம் செய்துவிடவேண்டியதென்றும் அவர்களுக்குள் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. மாமூல் படி நடப்பதுதான் ஜனசமூகம் விரும்பும் தர்மம். தன்னு

டைய சொந்த அபிப்பிராயத்தின்படி நடக்கும் மனிதன் அதற்கு எட்டிக்காய்போல. அதற்குச் சத்தியங்கள் பிடிக்காது, சிருஷ்டாக்கள், ஆக்குவோர், வேண்டியதில்லை. வெறும் நாமங்களும் பழைய வழக்கங்களும் தான் வேண்டும்.

எவனொருவன் மனிதனாக விரும்புகிறானோ அவன் மாமூல்களை நொறுக்குகிறவனாக இருக்கவேண்டும்.* அழியாத கீர்த்தியை விரும்புகிறவன் தர்மம் என்னும் பெயரை மாத்திரம் கண்டு மயக்கிவிடக்கூடாது; அது அறமா இல்லையா என்று சோதிக்கவேண்டும். உன்னுடைய அறிவின் நேர்மையைப் பாதுகாத்துக்கொள்ளுவதுதான் உனக்கு எல்லாவற்றினும் பெரிய தர்மம். உனக்குள்ளே நீ நிஷ்களங்கனாக இருந்தாயானால் உலகம் உன்னை நாடும், தடையே இல்லை. நான் சிறுவனாக இருந்தபோது நல்ல யோக்கியதையுள்ள ஒருவர் பழைய கிறிஸ்தவமதக் கொள்கைகளைப்பற்றி இடைவிடாது என்னிடம் பேசி என்னை இமிசிப்பார். ஒருநாள் அவர் தொல்லை செய்த காலத்தில் அவருக்கு நான் சொன்ன பதில் எனக்கு இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது. "என் உள்ளத்தினுள்ளிருக்கும் அறிவின் நியமனத்தின் பிரகாரம் நான் நடக்கும்போது எனக்குப் பழைய புராணங்களாலாகவேண்டியதென்ன?" என்று நான் கேட்டதற்கு அவர், "ஆனால் உன் மனத்தில் தோன்றும் எண்ணங்கள் மேலேயிருந்து வராமல் அதோலோகத்திலிருந்து வரக்கூடுமாயிற்றே," என்றார். அதற்கு

---

* "த்ரைகுண்யவிஷயா வேதா, நிஸ்த்ரைகுண்யோ ப்ஹவார்ஜுன," என்ற பகவத் கீதையைக் கவனிக்க.

நான், "எனக்கு அவ்விதம் தோன்றவில்லை: ஆனால் நான் அசுரபுத்திரனாக இருந்தால் அசுரவாழ்க்கையே தான் விரும்பிடுவேன்," எனப் பதில் சொன்னேன். என்னுடைய இயற்கைக்குரிய தர்மங்களைத் தவிர வேறு எதுவும் எனக்குப் பொருளன்று. நல்லது, தீயது என்பதெல்லாம் வெறும் பெயரே: ஒரு பொருளினின்று இன்னொரு பொருளுக்கு வெகு சுலபமாக அந்தப் பெயர்களை மாற்றி வைத்துவிடுகிறார்கள். என்னுடைய அறிவுக்கு நியாயமாகப்பட்டது தான் நியாயம், அதற்கு விரோதமானதெல்லாம் அதர்மமே. மனிதன் இடையூறுகளைக் காணும்போது, தான் ஒருவன் தான் சத்தியம், மற்றதெல்லாம் வெறும் நாமதேயங்கள், க்ஷணபங்குர வஸ்துக்கள் என்கிற நினைவுடனே மேற்செல்லக்கடவன்.* பெயர்களையும், பெரிய கூட்டங்களையும், இறந்து போய்விட்ட சபைகளையும் கண்டு நாம் எப்படித் தலை வணங்கிவிடுகிறோம்! நினைக்க வெட்கமாக இருக்கிறது! நல்ல துணி உடுத்தி, சரளமாகப் பேசும் எவனும் தன்னிஷ்டப்படி என்னை ஆட்டிவைத்துவிடுகிறான். இது அத்தனை சரியன்று. என்னுடைய கடமை நேராக, பிராணவேகம் தளராமல், நிற்கவேண்டியது, எந்த வழியில் சென்றாலும் கசப்பான சத்தியத்தையும் சொல்லிவிடவேண்டியது. பொறுமைக்காரனும் வீண் டம்பக்காரனும் தயாளு வேஷம் போட்டால் பார்த்துக்கொண்டு சும்மா இருந்துவிடுகிறதா? ஒரு ஆகாத்தியக்காரன் தாஸ

* இடுக்கண் வருங்கால் நகுக: அதனை
அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல். குறள் கூஉக

விமோசனக் கக்ஷியில்* சேர்ந்துவிட்டு, பார்பாதோஸ்ஸிலிருந்து வந்த கடைசித் தந்தியைப்பற்றி என்னிடம் பேச வந்தால், "ஏய், முதலில் உன் குழந்தையிடத்தில் அன்பு காட்டு; விறகுவெட்டியிடம் கருணை வை; உனக்குள்ளே அன்பும் அருளும் அடக்கமும் பிறக்கட்டும்; ஆயிரம் மைலுக்கப்பாலிருக்கிற கறுப்பு மனிதர் மீது அபாரமான கருணை வைப்பதாக நடித்து, உனது ஈரமில்லாத, பேராசைபிடித்த, நெஞ்சை என்னிடம் வெழுமூட்டிக்காட்டவேண்டியதில்லை!" என்று நான் ஏன் சொல்லக்கூடாது? இதில் நயமும் நாகரிகமும் இல்லைதான், ஆனால் வெளிக்கு மாத்திரம் பிரியமாய் நடிப்பதைவிட உண்மையானது கொஞ்சம் அழகான பொருள் என்று தோன்றுகிறது. உன்னுடைய நல்ல குணத்துக்கு ஒரு கூர் வேண்டும், இல்லையானால் அது நல்லகுணமாகாது. இனிமை சவுங்கும்போது அதற்கு ஒரு மாற்றாகப் பகைமையைப் போதிக்கவேண்டும். என்னுடைய மேதை என்னை அழைக்கும்போது எனக்குத் தகப்பன், தாய், பத்தினி, சகோதரன், யாரும் வேண்டியதில்லை.† என் வீட்டின் வெளிவாசலின் நிலையில் என்னுடைய போக்கு என்று எழுதிவைப்பேன். யோசித்துப் பார்த்தால், அது

---

* ௫௬-வருஷங்களுக்கு முன்வரையில் அமெரிக்கர் நிகிரோவர்களை அடிமைகளாக விற்பதும் வாங்குவதுமாக இருந்தார்கள். அவ்விதம் மனித விக்கிரயம் செய்யக்கூடாது என்கிற அபிப்பிராயம் நாட்டில் வளரவே அந்த அபிப்பிராயத்தை ஒப்புக்கொண்டவர்களுக்கு தாஸ விமோசனக்கக்ஷியார் என்கிற பெயராயிற்று. பார்பாதோஸ் என்பது நிகிரோவ அடிமைகளைக் குரூரமாக நடத்துவதில் பேரெடுத்த ஊர்.

† பதிஸுதாந்வயப்ராத்ருபாந்தவாந் அதிவிலங்க்ய தேऽந்த்யச்யுதாகதா: — கோபிகா கீதை.

வெறும்போக்கன்று, அதைவிடப் பெரிய விஷயம் என்றே ஏற்படும் என நம்புகிறேன். ஆனால் அதைப்பற்றிப் பதில் சொல்லிக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. ஏன் மனிதரிடத்து ஒருகாலத்தில் வருகிறேன் ஏன் இன்னொரு காலத்தில் நெருங்குவதில்லை என்பதற்குக்காரணம் சொல்லுவேன் என்று எதிர்பாராதே. இன்று ஒரு சாது சொன்னனே அதுபோல, ஏழைகளுக்கெல்லாம் ஒருவேலை சம்பாதித்துக்கொடுப்பது என்னுடைய கடமை என்று என்னிடம் சொல்லாதே. அடே முட்டாத்தனமான கிருபாளு, எனக்குச் சம்பந்தமில்லாத, என்னைச் சேராத, மனிதர்களுக்கு அஞ்சு ரூபாய், இரண்டுபணம், ஒரு சல்லி கொடுக்க எனக்கு இஷ்டமில்லை! ஒரு ஜாதி மனிதர் இருக்கிறார்கள்; அந்தக்காரண தர்மத்தின்படி, ஆத்மானுரீதியாய், நான் அவர்களுக்கு அடிமை; அவசியமானல் அவர்களுக்காகக் காராக்கிரகத்துக்குக் கூடச் செல்லுவேன். ஆனல் உங்கள் நானுகோத்திரப் பொது தர்மங்கள்; மூடர் வித்தியாலயங்களின் கல்வி; இப்பொழுது பெரும்பாலும் இருப்பதுபோல வீண் கூட்டம் போட ஏற்பட்டிருக்கும் பொது ஸ்தலங்கள்; முண்டங்களுக்குப் பிச்சை; எண்ணத் தொலையாத உத்தாரணைச் சங்கங்கள்; இவைகளுக்கெல்லாம் சில வேளைகளில் தாக்ஷணியப்பட்டு நான் என் டாலரைக் கொடுத்தாலும்,* அது துர்விநியோகமே; கூடிய சீக்கிரத்தில் அந்த மாதிரிக் காரியங்களுக்குக் கொடுக்கமாட்டேன் என்று கண்டிப்பாய்ச் சொல்

* "டாலர்"— ஒரு அமெரிக்க நாணயம்: தற்காலமதிப்பு ரூபாய் ஒன்றேகால்.

லிவிட எனக்குத் தைரியம் வந்துவிடும் என்று நம்புகிறேன்.

புண்ணியங்கள் செய்வது மனிதனுக்கு இயற்கையன்று, அது ஒரு அசாதாரணமான விஷயம், என்கிற அபிப்பிராயம் உலகத்தில் பொதுவாக இருக்கிறது. மனிதன் வேறும் அவனுடைய சற்கருமம் வேறும்! கவாத்துக் காலத்தில் ஆஜர் கொடுக்காவிட்டால் அபராதம் கொடுப்பார்களே, அதுபோல நினைக்கிறார்கள் மனிதர் ஒரு புண்ணிய காரியம் செய்வதை! ரோகிகளும் பித்தர்களும் சோற்றுக் கடையில் இரட்டைப் படியாக விலை கொடுப்பது போல, தர்மங்கள் செய்வதை உலகத்தில் வாழ்கிற குற்றத்துக்குப் பிராயச்சித்தமாக நினைத்து மனிதர் செய்கிறார்கள். செய்யும் தர்மங்களையெல்லாம் மனிதர் ஓர் அபராதத்தைச் செலுத்துவதுபோலச் செய்கிறார்கள். பிராயச்சித்தம் செய்வதன்று எனது இஷ்டம்; சம்பூர்ணமான வாழ்க்கையேதான் எனது நோக்கம். என்னுடைய வாழ்க்கைக்கு நோக்கம் வாழ்க்கையே ஒழிய, ஊரார் பார்த்துச் சாபாஷ் கொட்டவேண்டும் என்பதன்று. வாழ்க்கையானது பார்வைக்கு மாத்திரம் பளபளப்பாயிருந்து ஸ்தைரியமில்லாமலிருப்பதைக் காட்டிலும், அது சாதாரணமாயிருப்பது எவ்வளவோ மேல் என்பது என்னுடைய அபிப்பிராயம்; ஆனால் ஒன்று மாத்திரம், அது போலியாக இராமல் அயனாகவும் சமமாகவும் இருக்கவேண்டியது. அது சுகமாகவும் இன்பகரமாகவும் இருக்கவேண்டியது: பத்தியச்சாப்பாடு உதவாது. நீ ஆண்பிள்ளை என்பதற்கு எனக்குப் பிரத்தியக்ஷப் பிரமாணம் கொண்டுவா: உனது

உள்ளத்தை விட்டுவிட்டு, 'என்னுடைய புண்ணிய கர்மங்களைப் பார்,' என்றாயானால் நான் ஒப்பமாட்டேன். புண்ணியங்கள் என்று கருதப்படுகின்றனவே அவைகளைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் எனக்குள்ளே பாதக சாதகங்கள் ஒன்றும் ஏற்படவில்லை என்று எனக்குத் தெரியும். சுயமாகவே எனக்குள்ள உரிமைகளை விலை கொடுத்து வாங்க எனக்கு இஷ்டமில்லை. எனக்குள்ள சக்தி மிகவும் அற்பமானதாக இருக்கலாம்; ஆனால் நான் போலியல்லன், எனக்கேயாவது மற்றவர்க்காவது என்னை ருஜுப்படுத்திக்காட்ட அன்னியமான பிரமாணம் ஒன்றும் வேண்டியதில்லை.

என்னுடைய கடன் என்ன என்பது தான் எனக்குப் பொருளே ஒழிய ஜனங்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதன்று. ஜட உலகத்திலாகட்டும், மனோலோகத்திலாகட்டும், இதை விதியாகக் கொண்டு நடப்பது கடினம்; ஆனால் பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் உள்ள வித்தியாசம் அனைத்தும் இதுதான். உனது கடன் என்ன என்பதை உன்னைக் காட்டிலும் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறதாக நினைக்கும் மனிதர்கள் எப்பொழுதும் இருப்பார்களாதலால் நான் மேலே சொன்ன விதியைக் கைப்பற்றுதல் இன்னும் கடினமே. உலகத்தில் உலகத்தார் அபிப்பிராயத்தின் பிரகாரம் நடப்பது சுலபம்; நிர்மானுஷியமான இடத்தில் சொந்த அபிப்பிராயத்தின்படி நடப்பதும் சுலபம்; ஆனால் உலகத்தின் மத்தியில் இருந்துகொண்டு தனிமையில் அனுபவிக்கக் கூடிய சுயேச்சையை எவனொ

ருவன் பூரணமான சமாதானத்துடன் அனுபவிக்கிருனே அவன்தான் மகாபுருஷன்.*

உனக்கு அர்த்தரகிதமாய்ப் போய்விட்ட வழக்கங்களை நீ அனுசரிக்கக்கூடாது என்பது எதற்காக என்ருல், நீ அப்படி அனுசரித்தால் அது உன் சக்தியைச் சிதறடிக்கிறது, உன் நேரத்தை வீணுக்குகிறது, உன் யோக்கியதையின் உரத்தை இளக்கிவிடுகிறது. நீ ஜீவநாடி ஓய்ந்துவிட்ட ஒரு மதசங்கத்தைப் போஷித்துவருவாயாஞல், உயிரற்றிருக்கிற ஒரு பைபிள்சங்கத்துக்கு† நீ பணம் கொடுத்துவந்தாயாஞல், ராஜாங்கத்துக்கு அனுகூலமாகவாஞலும் சரி, பிரதிகூலமாகவாஞலும் சரி, ஒரு கக்ஷியின் அபிப்பிராயப்படி நீ சீட்டுப்போடுவாயாஞல், இந்த வேஷங்கள் போட்டுக்கொண்டிருக்கிற நீ யதார்த்தத்தில் எப்பேர்ப்பட்ட மனிதன் என்று அறிந்துகொள்ளுவது எனக்குக் கஷ்டமாகிவிடுகிறது. இதெல்லாம் அத்தனைக் கத்தனை உனக்குரிய வாழ்க்கையினின்று சக்தியை வாங்கியேவிடுகிறது, தடையில்லை. உன் சொந்தக் கருமத்தைமாத்திரம் நீ செய்வாயாஞல் உன்னை உடனே கண்டுபிடித்துக்கொண்டுவிடுவேன். உன் கருமத்தை மாத்திரம் நீ செய்தால் உன் சரீரத்தில் கட்டு ஏற்றிக்கொள்ளுகிருய். ஒரு கூட்டத்துக்கு இணங்கியிருப்பது வெறும் குருட்டு விவகாரம் என்று ஒருவன் கண்டுகொள்ளவேண்டும். நீ என்ன

---

* கர்மணைவஹி ஸம்ஸித்த்ஹிம் ஆஸ்த்ஹிதா ஜநகாதய:

† கிறிஸ்தவ வேதத்தை உலகத்தில் பரப்பித் தங்கள் மதத்தில் சேர்ந்தவரின் தொகையை அதிகரிக்கச் செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பல சங்கங்கள் இருக்கின்றன.

சமயத்தான் என்று எனக்குத் தெரிந்துவிட்டால் நீ செய்யப்போகும் வாதமும் எனக்குத் தெரிந்துவிட்டது. ஒரு பிரசங்கி தன் சமூகத்தின் நியமனங்களில் ஒன்றின் பிரயோஜனத்தைப் பற்றிப் பேசுவதாகப் பிரசுரம் செய்கிருன். இருதயத்திலிருந்து வருகிற ஒரு நூதனமான வார்த்தையாவது அவன் வாயிலிருந்து வரப்போகிறதில்லை என்று எனக்குச் சொல்லவும் வேண்டுமா? அந்த நியமனத்தின் காரண காரியங்களைப் பற்றி விசாரிப்பதாக ஆயிரம் மாதிரி அவன் நடித்தும் அவன் அவ்விதம் ஒன்றும் செய்யப்போகிறதில்லை என்று எனக்குத் தெரியாதா? ஒரே புறத்தை—பார்க்கலாம் என்று ஏற்கெனவே ஏற்பட்டிருக்கிற புறத்தையே — பார்ப்பதாக, அதுவும் மனிதன்போல அன்று, கேவலம் கோவில் குருக்கள் போலப் பார்ப்பதாகத்தான் அவன் விரதம் பூண்டிருக்கிருன் என்பது எனக்குத் தெரியாத விஷயமா? அவன் ஒரு கக்ஷிக்கு என்று வைக்கப்பட்டிருக்கிற வக்கீல். நியாயாதிபதிபோல நடிக்கும் நடிப்பெல்லாம் வெறும் பாசாங்கே. ஆமாம், மனிதரில் பெரும்பான்மையோர் ஏதோ ஒருவிதமான துணியைக்கொண்டு கண்ணைக் கெட்டியாய் மூடிக்கொண்டிருக்கிருர்கள்: ஏதாவது ஒரு அபிப்பிராயமுள்ள கூட்டத்தாரோடு தங்களைப் பிணித்துவைத்துக்கொண்டுவிடுகிருர்கள். இந்த இணக்கமானது அவர்களைச் சில விஷயங்களில் மாத்திரம் பொய்யர்களாக்குவதில்லை, ஏதோ சில பொய்களை மாத்திரம் சொல்லும்படி ஏவுவதில்லை, எல்லாச் சங்கதிகளிலும் பொய்யர்களாகவே ஆக்கிவிடுகிறது. அவர்கள் சொல்லுகிற ஒரு சத்தியமாகிலும் முற்றிலும்

சத்தியமன்று. அவர்கள் இரண்டு என்று சொல்லுவது உண்மையான இரண்டன்று, நாலு என்பது யதார்த்தமான நாலன்று. அவர்கள் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தையும் நமக்கு எரிச்சலை விளைவிக்கிறது. அவைகளைத் திருத்த எங்கேயிருந்து துவக்குகிறது என்று தெரிவதில்லை. மத்தியில் பிரகிருதி சும்மா இருக்கிறாளா? நாம் ஏற்றுக் கொள்ளுகிற கக்ஷிக்குரிய பந்திகாரு உடையை அதி சீக்கிரத்தில் அவள் நம்பேரில் போர்த்திவிடுகிறாள், நமது முகம் நடைஉடை பாவனையெல்லாம் ஒரே ரீதிக்கு வந்துவிடுகிறது, நாளாவட்டத்தில் அதி சாந்தமான கர்த்தப சுவரூபம் நமக்குச் சித்தித்துவிடுகிறது. ஆனால் இதற்கு மாத்திரம் சரியான தண்டனை நமக்குக் கையும்பிடியுமாய்க் கிடைத்துவிடுகிறது. எதுவென்றால், நமக்கு ஒவ்வாத கூட்டத்தில் நமக்கு ருசிக்காத வார்த்தையைக் கேட்டு அசட்டு இளிப்பு இளிக்கும்படி நேருகிறதே அதுதான். அப்பொழுது முகத்தின் தசை சுபாவமாக அசைவதில்லை, போலிச்சிரிப்பு உண்டாக்குவதற்காக வேணுமென்று அதைக் கொல்லவேண்டியிருக்கிறது. தசையும் இறுகிக் கொண்டு உள்ளே குத்துகிறது! சரியான பிராயச்சித்தம்!

நீ மாமூலுக்கு விரோதமாக நடந்தால் உலகம் உன்னைத் திக்காரம் செய்யும். ஆகையால் உனக்குக் கடுத்த முகத்தின் தாரதம்மியங்கள் அவசியம் தெரியவேண்டும். தெருவிலாகட்டும் ஒருநாலுபேரிருக்கும்சபையிலாகட்டும் ஜனங்கள் உன்னைப் பார்த்துக் கண் சிமிட்டுவார்கள். இந்த வெறுப்புக்குக் காரணம்உனக்கு அவர்கள் பேரிலிருக்கும் அவமதிப்பையும் அடலையும் போன்ற அவமதிப்பும் அட

லுமாக இருந்தால் நீ தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டுதான் வீடுபோகவேண்டும். ஆனால் பொதுக்கூட்டத்தின் கடுப்புக்காவது மலர்ச்சிக்காவது ஆழமான காரணம் கிடையாது. காற்று எந்தப் பக்கம் வீசுகிறதோ, பத்திரிகைகள் என்ன சுவரத்தில் பேசுகின்றனவோ, அதைப் பொறுத்திருக்கிறது அவர்களுடைய விருப்பும் வெறுப்பும். ஆனால் இதை ஒப்புக்கொள்ள வேண்டும், அவையத்தார், வித்துவத் கோஷ்டிகள், இவர்களுடைய அதிருப்தியைவிடப் பயங்கரமானது பொது ஜனங்களின் அதிருப்தி. உலகானுபவமுள்ள ஒரு தீரனுக்குக் கற்றவர் குழாத்தின் கோபத்தைத் தாங்குவது எளிது. அவர்களுடைய கோபம் வரம்புக்குட்பட்டது, முன் பின்பார்த்து நடப்பது; ஏனெனில் தங்களுடைய ஓட்டை அவர்களுக்கு நன்றாகத் தெரியுமாதலால் அவர்கள் மிகவும் பயந்தவர்கள். ஆனால் பெண்ணியல்புள்ள அவர்களுடைய கோபத்துடன் ஜனங்களுடைய கோபமும் சேர்ந்துவிட்டால், ஏழைகளும் அறிவிலிகளும் கிளம்பிவிட்டால், ஜன சமூகத்தின் அடியில் தூங்கிக்கொண்டிருக்கிற ஜடசக்தி உருமத் துவக்கிவிட்டால், அதை லட்சியம்செய்யாது தேவன்போலச் சஞ்சரிப்பதற்கு உடம்பிலேயே ஊறியுள்ள பெரும்புத்தியும் தர்மாதியும் அவசியம் வேண்டும்.

நம்முடைய தன்னம்பிக்கையை வாங்கிவிட இன்னொரு பயம் வந்து குறுக்கிடுகிறது. அதாவது, நேற்று நடந்ததினின்றும் சொல்லியதினின்றும் நாம் மாறுபட்டுவிடப்போகிறோம் என்கிற பீதி. நம்மைச்சுற்றிலு மிருப்போருக்கு நம்முடைய சுபாவத்தைக் காட்டக்கூடியது

நம்முடைய பழைய செயல்களே யாகையால் அவர்கள் எதிர்பார்க்கிறதற்கு விரோதமாக நடக்க நமக்கு மனம் வருகிறதில்லை.

ஆனால் தலையை ஒரே மாதிரிதான் வைத்துக்கொள்ள வேண்டுமென்று என்ன, அப்பா, கட்டாயம்? ஏதோ ஒரு இடத்தில் ஏதாவதொன்றைப் பகிரங்கமாகச் சொல்லிவிட்டிருந்தால், அதை மாற்றிவிடப் போகிறோம் என்ற பயத்தினால் ஏன், அப்பா, இந்த நினைவு என்கிற பிரேதத்தை இழுத்துக்கொண்டே செல்லவேண்டும்?* நீ ஏற்கெனவே சொல்லியிருப்பதற்கு மாறான அபிப்பிராயமே சொல்லிவிட்டாய் என்று வைத்துக்கொள்ளுவோம்: அதில் குடியென்ன முழுகிப்போய்விட்டது? பழைய ஞாபகத்தையே எப்பொழுதும் நம்பிக்கொண்டிருக்கக்கூடாது; ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்கவேண்டிய சங்கதிகளைக்கூட ஆயிரம் நேத்திரங்களோடு விளங்கும் வர்த்தமான காலத்தில் விசாரணைக்குக் கொண்டுவந்து சோதித்து வைத்து, எப்பொழுதும் புதிதான வாழ்க்கையே தான் மனிதன் வாழவேண்டும். ஸாங்கிய ரீதியாக விசாரித்து ஈசுவரனுக்குச் சரீரமில்லை என்று சொல்லியிருக்கிறாய் என்று வைத்துக்கொள்ளுவோம். ஆனால் மனதில் பக்தி உன்மேஷமாகும்போது கடவுளை உருவமுள்ளவனாகத்தான் நினைக்கவேண்டியிருக்கும். அக் காலத்தில் கடவுளை மனப்

---

* வ்ருத்தய: பஞ்சதய்யா: க்லிஷ்டாக்லிஷ்டா: ; ப்ரமாண விபர்யய விகல்ப நித்ரா ஸ்ம்ருதய: — யோகதர்சனம், சமாதி பாதம், ரு-வது சு-வது சூத்திரங்கள்.

பூர்வமாகத் துதிசெய்யக் கடவாய். அக் காலத்தில் வேசியினிடத்தில் அங்கியை விட்டுவிட்டு யோசேப்பு ஓடினுனே அதுபோல் உன்னுடைய சாஸ்திர மூட்டைகளை யெல்லாம் ஒரு கட்டாய்க் கட்டிவைத்துவிட்டு ஒரே ஓட்டமாக ஓடி வந்துவிடக் கடவாய்.

மூடத்தனமாக முன்பின்னுதையாமை யொன்றையே நாடுவது சிற்றறிவினரைப் பிடித்திருக்கிற ஓர் பேய். அற்ப அறிவுள்ள ராஜதந்திரிகளும், சாஸ்திரிகளும், மதபோதகர்களும்தாம் அதைக் கும்பிடுவார்கள். ஒரு மகாத்துமா அபிப்பிராய ஒருமையைப் பற்றிச் சிந்திக்கவே கூடாது. அதற்கு, சுவரின்மீது விழுந்திருக்கிற நிழலைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கலாமே. இன்று உனக்குத் தோன்றுகிற விஷயங்களை அழுத்தம் திருத்தமாகச் சொல்லு. நாளைக்குத் தோன்றுகிற விஷயங்களை நாளைக்கு அதே மாதிரி அழுத்தம் திருத்தமாகச் சொல்லு. "ஆ, அப்படியானுல் ஜனங்கள் என்னைப்பற்றிக் குறைவாக நினைப்பார்களே!" என்கிருய். குறைவாக நினைக்கப்படுகிறது அத்தனை கெடுதலா என்ன? பித்தாகோரன், ஸொக்ராத்தன், இயேசு, லூதர், கோப்பர்னிக்கன், கலீலெயோ, நியூட்டன், ஏன் மனிதசரீரத்தை எடுத்த நிரஞ்சனமான ஞானுத்மாக்கள் எல்லோருமே அவரவர்கள் காலத்தில் குறைவாகத்தான் நினைக்கப்பட்டார்கள். பெருமைக்குக் கட்டளைக்கல்லே சாமானிய ஜனங்களால் தூறப்படுவதுதான்.

யாராலும் தன் சுபாவத்தை மீறிவிட முடியாது. ஆந்தீஸ்,* ஹிமாசலம் முதலிய பெரிய மலைகளெல்லாம் பூகோளத்தின் வளைவை உத்தேசிக்கக் கேவலம் திருண மாத்திரமாகத்தான் இருப்பதுபோலவே, மனிதனுடைய மனப்போக்குகள் சகலமும் அவனுடைய சுபாவத்தின் தர்மத்துக்கு உள்ளடங்கினவையாகவே இருக்கும்.† நீ அவனை எந்த மாதிரி சோதித்தாலும் பாதகமில்லை, முடிவு இதுதான். மனிதனுடைய சுபாவமானது அலெக்ஸாந்திரியக் கவி என்று சொல்லுகிற சித்திரக்கவியின் குணமுள்ளது: அதை நேராகப் படித்தாலும், திருப்பிப் படித்தாலும் குறுக்காகப் படித்தாலும் ஒன்றாகவேதான் இருக்கும். ஆகையால் நான் ஈசுவரன் எனக்கு அருளியிருக்கிற ஆசிரமவாசம் போன்ற இந்த வாழ்க்கையில் முன் பின் பார்க்காமல் என் சுத்தமான சிந்தனைகளைக் குறித்து வைக்கக்கடவேன். என்னுடைய சங்கற்பமில்லாமலே, எனக்குத் தெரியாமலே, அவை அழகாகவிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. என் புத்தகத்தைப் படிக்கும் போது தேவதாரு மரத்தின் மணம் வீசவேண்டும், வண்டுகளின் ரீங்காரம் ஞாபகத்துக்கு வரவேண்டும். இதோ அங்கே பறக்கும் குருவி கொத்திக்கொண்டு போகிறதே அந்த வைக்கோலையும் நூலையும் அது என்னுடைய

---

* ஆந்தீஸ் என்பது தென் அமெரிக்காவின் மேற்குக் கரை ஓரம் முழுவதும் சுமார் ௪000 மைல் நிகளத்துக்கு ஓடும் ஒரு பிரம்மாண்டமான மலைத் தொடர். அதன் சிகரங்களின் உயரம் உஉ,௪00 அடி வரையில் இருக்கிறது.

† ஸத்ருசம் சேஷ்டதே ஸ்வஸ்யா: ப்ரக்ருதேர் ஞானவாநபி. பகவத் கீதை, ங. ௩௩.

நூலில் சேர்த்துநெய்யவேண்டும். நம் தன்மைக்கு மாறுன கீர்த்தி நமக்கு வருகிறதில்லை. நம்முடைய சுபாவம் தானுகவே மனிதருக்கு நற்போதனை புகட்டுகிறது. நாமாக வேண்டுமென்று சொல்லும் சொல் இரண்டாம் பக்ஷம் தான். தமக்குள்ளிருக்கும் தர்மாதர்மங்களை வெளிக் கருமங்களால்தான் தாங்கள் பிறருக்குப் போதிக்கிறதாக மனிதர் நினைக்கிறுர்கள்; ஆனுல் தர்மம் அதர்மம் என் கிற இரண்டும் அது அதன் மணத்தை இடைவிடாது வீசிக் கொண்டே இருக்கின்றன. அவர்களுக்கு அது தெரிகிற தில்லை.

செய்யும் கருமங்கள் நானுவிதமாக இருந்தாலும், அவை அந்த அந்த நேரத்துக்குத் தகுந்தவையாகவும் சுத்த அந்தக்கரணத்தோடு செய்யப்பட்டவை யாகவும் இருந்தால் அவைகளுக்குள் பொருத்தம் அவசியம் இருக் கும். ஏனெனில் ஒரே மனதிலிருந்து உற்பத்தியாகிற படியால் அவை பார்வைக்கு ஒன்றுக்கொன்று மாறுபடி னும் யதார்த்தத்தில் அபசுவரம் காட்டமாட்டா. ஒரு தூரத்திலின்று, அறிவின் ஒரு உயரத்திலின்று, பார்த் தால் இந்த மாறுபாடுகள் கண்ணுக்குத் தோன்ரு. அவை அனைத்துக்கும் ஒரே சுபாவம்தான் காரணமாகையால் அது அவைகளை ஒருமைப்படுத்திக் காட்டுகிறது. சமுத் திரத்தில் சர்வோத்தமமான கப்பலின் மார்க்கம்கூட நூறுகோணல்களுள்ளதாகத்தான் இருக்கும். ஆனுல் தகுந்த தூரத்திலிருந்து பார்த்தால் அத்தனையும் சமனுகி ஒரு நேர் கோடாகக் காணப்படும். சுபாவவத்தாக நீ செய் யும் காரியத்துக்கு விளக்கம் வேண்டுவதில்லை. அப்படியே

சுபாவவத்தாக நீ செய்யும் மற்றக் கருமங்களையும் நீ முதற் செய்த இயற்கையான செய்கையே விளக்குகிறது. மாமூலானது ஒன்றையும் விளக்குவதில்லை. இப்பொழுது செய்யும் கருமத்தில்மாத்திரம் ஞப்தி வைத்துச் செய்: இதற்கு முன் நீ ஞப்தியோடு செய்திருக்கும் கருமம் இதற்கு ஆதாரமாக நிற்கும். பெருமையானது வருங்காலத்தையே தான் நோக்கி நிற்கும். இன்றைக்குக் கண்ணஞ்சாது தர்மம் ஒன்றையே நாடிச் செய்ய எனக்கு வன்மையிருக்க வேண்டுமானால், இப்பொழுது எனக்குப் புறக்கொடை காத்து நிற்கப் போதிய தர்மத்தை நான் ஏற்கெனவே செய்திருத்தல்வேண்டும். எது எப்படியிருந்தாலும் இருக்கட்டும், இப்பொழுது அறம் செய். வெளித்தோற்றங்களை நீ லக்ஷியம் செய்யாதே. லக்ஷியம் செய்கிறதில்லையென்று நிச்சயம் செய்துகொண்டுவிட்டாயானால் நீ எப்பொழுதும் தைரியமாகவே அவைகளை அலக்ஷியம் செய்துவிடலாம். மன உறுதியின் சக்தி வளர்பிறையை ஒத்தது. ஒருவன் பண்டைக் காலத்தில் செய்துவைத்திருக்கிற தர்மங்களெல்லாம் சேர்ந்து அவனுக்கு இன்றைக்கு உதவி புரிகின்றன. படைக்களத்து வீரருக்கும் அவைக்களத்து வீரருக்கும் எல்லையில்லாத் தேசு கொடுத்து, பார்ப்போர் மனதைக் கவரச்செய்வது என்ன? அவர்கள் முன்பு பெற்றிருக்கிற பிரதாபங்களினும் வெற்றிகளினும் ஞாபகமாக்கும். அவை அத்தனையும் ஒருங்கு சேர்ந்து ஏககாலத்தில் அவர்கள் பேரில் ஒளியைக் கொட்டுகின்றன. கட்புலமாகாத தேவக்கூட்டம் தான் அவர்களைப் புடைசூழ்ந்திருக்கிறதோ என்று சொல்லும்படி அந்தக் காந்தி

அவர்களைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. அந்தக் காந்தி தான் வாக்மியான சாதமுடைய வாக்கில் பேரிடி முழக்கத்தைத் தந்தது, அதுதான் வாஷிங்டனுடைய நடையில் காம்பீரியத்தை நாட்டியது, அது தான் அமெரிக்காவின் வீரிய மனைத்தையும் ஆதாம்ஸின் கண்ணில் கொண்டு வந்து நிறுத்தியது. குணங்களுள் மானத்துக்கு நாம் இத்துணை வணக்கம் செலுத்துவதற்குக் காரணம், அது என்றும் அழியாத பொருள் என்பதே. அது என்றும் பழைமையான அறம். அது இன்றைய வஸ்து அன்று, அதனால் தான் அதை இன்று பூசிக்கிறோம். நாம் ஏன் அதைப் பக்தி விசுவாசத்துடன் போற்றுகிறோமென்றால், அது நம் பக்தி விசுவாசத்தை ஏமாற்றிப் பறித்துக்கொள்ளுவதற்காக வைத்திருக்கும் பொறியன்று; அது கேவலமான,* சுயம்புவான வஸ்து; வாலிபனிடத்துத் தோன்றினாலும் கூட அது நிர்மலமான, பழைமையான, பொருளாகவே இருக்கிறது.

மாமூல், பொருத்தம், என்கிற கதைகளெல்லாம் இந்த நாட்களோடு போய்விடும் என்று நம்புகிறேன். அவைகளைக் கஜெத்தில் போட்டுவிட்டு அவைகளின் பெயர்களைக் கேட்ட மாத்திரத்திலேயே எல்லோரும் கைகொட்டிச் சிரிக்கட்டும்.† இனிமேல் சாப்பாட்டுக்கு அழைப்ப

* கைவல்லியத் தன்மையுள்ள, சுவச்சமான.

† இன்ஸால்வெண்டு வாங்கினவர்களின் பெயரை அரசாங்கப் பத்திரிகையான "கஜெத்"தில், இன்னான் இன்ஸால்வெண்டாகிவிட்டான் என்று போடுவது வழக்கம்.

தற்குச் சேமக்கலம் கொட்டுகிற வழக்கத்தை நிறுத்தி விடுவோம்.* ஸ்பார்த்தர் ஊதும் குழலை ஊதி அழைக்கலாம். இனிமேல் எதற்காகவும் யாரையும் தலை வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டாம். என் வீட்டுக்கு விருந்தாக ஒரு பெரிய மனிதன் வருகிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். அவனை உபசார வார்த்தைகள் பேசிக் "குஷாய்"ப் படுத்த எனக்கு இஷ்டமில்லை. என்னைத் தான் அவன் "குஷாய்"ப் படுத்தட்டுமே. நான் மனிதத்தன்மைக்கு நிதரிசனமாக நிற்பேன். பிரியமாக இருப்பேன், தடையில்லை; ஆனால் இச்சகம் பேசி, அயதார்த்தமான ஸ்தோத்திரங்கள் செய்யமாட்டேன். தனுக்காக நடக்கிற மொண்ணைகளையும் அற்பத்தில் திருப்தியாய்விடுகிற ஆழமற்றவர்களையும் நாம் தாக்ஷிணியமில்லாமல் கண்டித்துவிடுவோம். எவ்வளவு தாழ்ந்த வேலையாயிருந்தாலும் சரி, உண்மையான வேலை செய்துகொண்டிருக்கும் ஒவ்வொரு மனிதனும் ஒரு மேதாவி, ஒரு கலைஞன்; யதார்த்த புருஷன் ஒரு தேசகாலத்துக்குக் கட்டுப்பட்டவன் அல்லன்; அவன் சகலத்திற்கும் கேந்திரம், அதாவது நடுமையத்திலிருக்கிறான்; என்கிற இந்தச் சர்வ இதிகாச சத்தியத்தை மாமூல்காரர், வியாபாரிகள், உத்தியோகஸ்தர் முதலான சகல மனிதர்களிடமும் நாம் ஆத்திரத்தோடு சொல்வோமாக. இப்பேர்ப்பட்ட யதார்த்த புருஷன் இருக்கும் இடத்தில் பிரகிருதி தேவி நிருத்தம் செய்கிறாள். உன்னையும், எல்லா மனிதர்களையும், எல்லாச் சம்பவங்களையும் அவன் நிறைபோட்டுப் பார்ப்பான். ஜன சமூகத்தில் சாதார

---

* ஆசிரியன் காலத்தில் இது அமெரிக்கருள் வழக்கம் போலும்.

ணமாக யாரைப் பார்த்தாலும் இன்னொரு பதார்த்தத்தின் அல்லது மனிதனின் ஞாபகம் வருவது வழக்கம். ஆனால் ஆண்மையை, சத்தியத்தை, பார்க்கும்போது வேறு ஒன்றும் ஞாபகத்திற்கு வராது. அது பிரபஞ்சம் அனைத்தையும் தள்ளிவிட்டுத் தான் அதன் ஸ்தானத்தில் உட்கார்ந்துகொண்டுவிடுகிறது. காலதேசங்கள் அனைத்தையும் ஒன்றுமில்லை என ஆக்கக்கூடிய வன்மை இருக்கவேண்டும் மனிதனுக்கு. யதார்த்த புருஷன் ஒவ்வொருவனும் தான் ஒருவனே ஒரு தர்மம், ஒரு நாடு, ஒரு யுகமாக ஆகிவிடுகிறான். அவன் கொண்ட கருத்து முழுவதையும் நிறைவேற்ற அவனுக்கு எல்லையற்ற இடம், எல்லையற்ற ஜனம், எல்லையற்ற காலம் வேண்டியிருக்கிறது. தலைமுறை தலைமுறையாக மனிதர் அவன் சென்ற வழியைத் தாஸானுதாஸர் போலப் பின்பற்றிக்கொண்டு செல்லுகிறார்கள். ஸேஸர் என்று ஒருவன் தோன்றுகிறான், அவனிடமிருந்து ரோம ஏகாதிபத்தியம் உண்டாகி யுக யுகாந்தரங்கள் வரையில் செழித்தோங்குகிறது. கிறிஸ்து என்று ஒருவன் தோன்றுகிறான், கோடானு கோடி ஜனங்கள் அவனிடம் சரண் புகுந்து, தர்மமும் பூரணமும் அவனையன்றி வேறில்லை என நினைத்துவிடுகிறார்கள். ஒரு சமயமானது ஒரு மனிதனுடைய பிரம்மாண்டமான சாயை. துறவு மார்க்கமானது துறவி அந்தோணியாரின் சாயை;* பிராட்டெஸ்டாண்டு சீர்திருத்தம் லூதரின் சாயை; குவேக்கர் சமயம் பாக்ஸின் சாயை; மெத்தோடிஸ்டுகளின் சமயம் வெஸ்லியின் சாயை; தாஸ விமோ

* ஐரோப்பாவில்.

சனம் கிளார்க்குஸனுடைய சாயை. "ரோமாபுரியின் சிகரம்" என்றான் ஸீப்பியோவை மில்டன். இதிகாசம் அனைத்தும், பார்க்கும்போது, சில உறுதியுள்ள தீரர்களுடைய சரித்திரங்களே தான்.

ஆகையால் மனிதன் தன் யோக்கியதையை நன்றாகத் தெரிந்துகொண்டு காளைபோலக் கம்பீரமாக உலாவட்டும். அவனுக்கென்றே ஏற்பட்டிருக்கிற இந்த உலகத்தில், அவன், அப்பன் பெயர் தெரியாத குண்டகன்போலவும், பிச்சைக்காரன்போலவும், பாத்தியமற்றவன் போலவும் ஒடுங்கிக்கொண்டு, பதுங்கிக்கொண்டு, அங்குமிங்கும் பார்த்து ஒளிந்துகொண்டு செல்லவேண்டாம். ஆனால் ஒரு ஆச்சரியமான கோட்டையைக் கட்டினவனுடைய, அல்லது சிலையில் தேவதைகளைப்போன்ற உருவத்தை வெட்டினவனுடைய, சக்தி தனக்குள் இல்லை என்று கண்டு ஒரு மனிதன் இவைகளையெல்லாம் பார்க்கும்போது தன்னை ஒரு பதர் என நினைத்துக்கொள்ளுகிறான். அரண்மனைகளையும் சிலாவிக்கிரகங்களையும் உயர்ந்த கட்டடமுள்ள புத்தகங்களையும் பார்த்துப் பயந்துபோய்விடுகிறான். அவைகளுக்கும் தனக்கும் சம்பந்தமே யில்லை என்று நினைத்துக்கொள்ளுகிறான். அவனைப் பார்த்து 'நீ யார் ஓய்?' என்று அவை கேட்கிறதுபோல அவனுக்குப் படுகிறது. ஆனால் உண்மையில் அவையெல்லாம் தான் அவன் எப்பொழுது தங்களைக் கவனிக்கப்போகிறான் என்று கை கட்டிக் காத்துக்கொண்டிருக்கின்றன: அவனுடைய மனோ தத்துவங்கள் வெளிப்பட்டு, தங்களை அவன் ஸ்வீகரித்துக் கொள்ளவேண்டும் என்றேதான்

அவை தவஞ்செய்துகொண்டிருக்கின்றன. என்னுடைய அபிப்பிராயத்துக்குக் காத்துக்கொண்டிருக்கிறது அந்தச் சித்திரம். என்னை அதட்ட அதற்குப் பாத்தியமில்லை, அதன் யோக்கியதாயோக்கியதைகளைப்பற்றி நானுக்கும் நிர்ணயிக்கவேண்டியவன். குடித்துப் பிரக்ஞையின்றி விழுந்து கிடந்த ஒரு குடியனை ஒரு பிரபு தன் வீட்டுக்குத் தூக்கிக்கொண்டு போனதாகவும், அங்கே அவனை நீராட்டிப் பிரபுவின் சயனத்தில் விட்டு, அவன் விழித்ததும் அவனை ஆசார உபசாரமாய் நடத்தி, 'தேவரீர் பிரபு, இது காறும் தாங்கள் சித்தஸ்வாதீனம் தவறியிருந்ததால் வேறு நினைவாக இருந்தீர்,' என்று சொல்லி அவன் பிரபுவென்றே நம்பும்படியாகச் செய்துவிட்டதாகவும் ஒரு கதை உண்டு. அந்தக் கதையில் ஜனங்களுக்கு இத்தனை ருசி இருப்பதற்குக் காரணம் வேறொன்றுமில்லை: மனிதனே உலகத்தில் ஒரு விதக் குடியன்; சிற்சில காலங்களில் அவன் விழித்துக் கொண்டு சுய ஞானத்தையடைந்து, தான் யதார்த்தமாக அரசன்தான் என்று கண்டுபிடிக்கிறானே, இந்த விஷயத்தைக் கூடமாகக் காட்டுவதனால்தான் அந்தக் கதைக்கு அத்தனை கௌரவம்.

நாம் யாசகர்போல, இச்சகம் பாடுபவர் போலத்தான் நூல்களைப் படிக்கிறோம். இதிகாசக் கதைகளைப் படிக்கையில் நம்முடைய மனோதர்மம் நம்மை ஏமாற்றிவிடுகிறது. ஒரு சின்ன வீட்டில் இருந்துகொண்டு சாதாரணமாக உழைத்து ஜீவித்துக்கொண்டிருக்கிற ஜான், எட்வார்டு என்ற பேர்வழிகளின் கதையைவிட உயர்ந்தது போலத் தோன்றுகிறது ராஜ்ஜியமும், பூமியும், பொருளும் அதி

காரமும் வாய்ந்தவர்களின் கதை. ஆனால் உலகத்து வாழ்க்கை இருபேருக்கும் ஒன்றே. மொத்தம் கட்டிப் பார்த்தால் அவர்களுடைய மொத்தம் இரண்டும் ஒன்றாகத் தானிருக்கும். அப்படியானால் ஆல்ப்ரெட்டுக்கும், ஸ்காந் தெர்பெர்க்குக்கும், குஸ்தாவ அதோல்பனுக்கும் ஏன் ஐயா இத்தனை சலாம் போடவேண்டும்? அவர்கள் தர்ம வான்களாக இருந்தார்கள் என்று வைத்துக்கொள்ளு வோம். தர்மம் அத்தனையையும் ஒழித்துவிட்டார்களா என்ன அவர்கள்? உலகம் எவ்விதம் அவர்களுடைய இசை நிரம்பிய காரியங்களுக்கு அந்தக்காலத்தில் காத்துக் கொண்டிருந்ததோ, அவ்விதமேதான் நீ செய்யவேண்டிய காரியத்துக்கும் இன்று காத்துக்கொண்டிருக்கிறது. சாமா னிய ஜனங்கள் தங்கள் சொந்த அபிப்பிராயப்படியே நடக்க ஆரம்பிப்பார்களானால் புகழானது அரசருடைய செயல் களை விட்டுவிட்டுச் சான்றோரின் செயல்களையே நாடி நிற் கும். மனிதர்களுடைய கண்களையெல்லாம் மயக்கிவிட்டு அரசர்கள் உலகத்துக்கு இந்தச் சத்தியத்தைப் போதித் துக்கொண்டிருக்கிறார்கள். மனிதனுக்கு மனிதன் இத் துணை மரியாதை செலுத்தவேண்டியது என்று அவர்கள் ராஜரீகம் என்கிற பிரம்மாண்டமான லிங்கத்தின் வாயி லாக உலகத்துக்குக் காட்டுகிறார்கள். அரசனும் பிரபுவும் கிராமாதிபதியும் தம் தம் இஷ்டப்படி நடக்கவும், மனி தர்களுடைய கௌரவங்களைத் தம்மிஷ்டப்படி வைக்கவும் மாற்றவும், தமக்கு மனிதர் கொடுக்கும் மரியாதைக்கும் செல்வத்துக்கும் விலையாகப் பணம் காசு கொடுக்காமல் கௌரவங்களும் பட்டங்களும் மாத்திரம் கொடுக்கவும்,

சட்டத்தின் உருவே தாம்தாம் என்று சொல்லிக்கொள்ளவும் அவர்களுக்கு ஜனங்கள் எவ்வளவு பக்தி விசுவாசத்துடன் இடங்கொடுத்திருக்கிறார்கள்! ஆனால் இப்படி இடங்கொடுத்திருப்பதன் கூடார்த்தம் என்ன?—தங்களுக்கும் மற்றெல்லா மனிதருக்கும் இதே மாதிரி உரிமைகள், இதேமாதிரி லக்ஷணங்கள் உண்டு என்று அவர்கள் மனதில் அதி மந்தமாகத்தான் இருந்தாலும் யதார்த்தத்தில் இருக்கவே செய்கிற உணர்ச்சியைத் தான் அவர்கள் இந்த விசித்திரமான பாஷையில் காட்டியிருக்கிறார்கள்.

வேறொன்றையும் பார்த்துச் செய்யப்படாமல் தனக்குத் தானே உவமையா யிருக்கிற தனிமுதற் செய்கைகளெல்லாவற்றிற்கும் ஒரு மோகனசக்தி இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதற்குக் காரணம் என்ன என்று தெரியவேண்டுமானால் தன்னம்பிக்கையின் அருத்தத்தை விசாரிக்கவேண்டும். எல்லோரும் விசுவசிக்கக்கூடிய தீரபுருஷன் யார்? சுதந்தரத்தின் ஒரு சின்னம் இருந்தால் போதும், அற்பத்திலும் அற்பமான செயல்களினுங்கூட வனப்பின் ஒரு கிரணத்தை விசிறி, எங்கிருந்து நோக்கியும் மாறுபடாமல், ஒரே ரீதியாய்ப் பிரகாசித்துக்கொண்டு சாஸ்திரத்தை யெல்லாம் மயக்கிவிடுகிற தாரகை இருக்கிறதே, அதன் சுபாவமென்ன? அதன் சக்தி யாது? இந்த விசாரணையானது, இயற்கையறிவு என்றும் சுயம்புசக்தி என்றும் வழங்குகிறதும், மேதை, தர்மபுத்தி, ஜீவன் இவைகளுக்கு மூலாதாரமாக இருக்கிறதுமான ஆதிப்பொருளினிடம் நம்மைக் கொண்டுவந்து சேர்க்கிறது. இந்த அனன்னியமான

ஞானத்துக்குத்தான் போதம் என்ற பெயர் கொடுக்கின்றோம். மற்றதெல்லாம் கேவலம் கல்வி கேள்விகளே. நமது விமரிசனத்தில் அகப்படும் முடிவான பொருள் அதுதான். அந்தச் சர்வாதாரமான சக்திதான் சமஸ்த வஸ்துக்களுக்கும் பொதுவான கரு. ஏனெனில் மனது சாந்தியை அடைந்திருக்கும்போது ஆத்மாவில் நம்மையறியாமல் எழுகின்ற ஸத் பாவமானது வஸ்து சமக்கிரத்துக்கு, ஆகாயம், பிரகாசம், காலம், புருஷன் என்கிற பொருள்களுக்கு,வேறுபட்டதன்று, அவைகளோடு ஒரே தன்மையுடையது.* அவைகளின் சத்து எங்கிருந்து உற்பத்தியாகிறதோ அங்கிருந்துதான் அதுவும் உற்பத்தியாகிறது. எந்தச் சக்தியினால்பிரபஞ்சப் பொருள்கள் நிற்கின்றனவோ அதே சக்திதான் நமக்குள்ளும் புகுந்து நம்மையும் ஆட்டுகின்றது. ஆனால் பொருள்களைப் பிரபஞ்சத்தில் பார்க்கும்போது நமக்கும் அவைகளுக்கும் மூலகாரணம் ஒன்றுதான் என்பதை நாம் மறந்துவிடுகிறோம். இந்தச் சக்திதான் கருமத்துக்கும் ஞானத்துக்கும் ஊற்று. இதுதான் பேறறிவாகிய காற்றை நமக்குள் வாங்கும் சுவாசாசயம். இதை மறுப்பது நாஸ்திகத்தன்மையேயொழிய வேறில்லை. பிரம்மாண்டமான சித்சக்தியின் மடியில் நாம் சிசுக்கள்போல இருந்துகொண்டிருக்கிறோம். அவள் நம்மைத் தன் சத்தியத்தைக் கிரகிக்கும் பாத்திரமாகவும் தன் தொழிலை நடத்தும் அங்கங்களாகவும் ஆக்கியிருக்கிறாள். ஒரு நியதியை நாம் கண்டறியும்போது, ஒரு சத்தியத்தை நாம் பார்க்கும்போது, நாமாக

---

* தத் த்வம் அஸி, ச்வேதகேதோ!

ஒன்றும் செய்வதில்லை, அதன் ஒளி உள்ளே செல்ல வழி மாத்திரம்தான் விடுகிறோம். இதற்கு உற்பத்திஸ்தானம் எங்கே என்று பார்த்தாலோ, ஆத்மாவின் ரகசியத்தை அறிய விரும்பினாலோ, விசாரணை மேலே ஓடமாட்டே னென்கிறது. அது இப்பொழுது இங்கே சான்னித்தியமாக இருக்கிறது அல்லது இல்லை, இவ்வளவுதான் நாம் அதைப் பற்றிச் சொல்லமுடியும். ஒவ்வொருவனுக்கும் தன் மன தில் தன் சங்கற்பத்தால் எழும் எண்ணங்களுக்கும், சங் கற்பாகிதமாய்த் தானே எழும் தோற்றங்களுக்கும் உள்ள பேதம் நன்றாய்த்தெரியும். இப்படித் தானே எழும் தோற் றங்களை முற்றிலும் நம்பவேண்டியது என்று அவன் கண் டறிகிறான். அவைகளை வாய்விட்டுச் சொல்லுகையில் அவன் மயங்கிவிடலாம். ஆனால் பகலும் இரவும்போல அவை சத்தியம், மறுக்கமுடியாதவை என்று மாத்திரம் அவன் அவசியம் உணருகிறான். நானாக வேணுமென்று செய்யும் கருமங்களும், கற்கும் கல்வியும் ஸ்திரமற்றுச் சலிக்கின்றன. அவை எனக்கு அத்தனை லக்ஷியமில்லை. ஆனால் என் மனதில் எழும் நிஷ்காரியமான மனக்கோட் டை, அற்பாற்பமானதா யிருந்தாலும்சரி இயற்கையில் எழும் மனப்பாடு, இவைகளை லக்ஷியம் செய்யாமலிருக் கவே முடியாது. பேதைகள் ஒரு தடவை இருந்தபடி இன்னொரு தடவை இல்லாமல் சதா மாறிக்கொண்டிருக் கிற தங்கள் அபிப்பிராயங்களைப் போலவே, ஏன் அதை விட அதிகமாகவே, தங்கள் மனதில் எழும் தோற்றங்க ளையுங்கூட மாறாகச் சொல்லுகிறார்கள். ஏனெனில் தோற் றத்துக்கும் அபிப்பிராயத்துக்கும் உள்ள பேதத்தை அவர்

கள் பாராட்டுகிறதில்லை. இன்ன பொருளைப் பார்ப்பேன் என்று தானே ஒருவன் சங்கற்பித்துக்கொள்ளுகிறான் என ஜனங்கள் நினைக்கிறார்கள். ஆனால் ஒருவனுக்குத் தோன்றுவதெல்லாம் விதியின் செய்கையேயொழிய அவனிஷ்டமன்று. எனக்கு ஒரு உண்மை தோன்றுமாயின், எனக்கு முன் அது ஒருவருக்கும் புலப்படாதிருந்தாலும், எனக்குப்பின் என் சந்ததிக்கும் அது தோன்றும், காலக்கிரமத்தில் உலகனைத்துக்குமே அது தோன்றும். ஏன்? சூரியன் எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை என்னுடைய சித்தத்தில் எழுந்த தோற்றம்!

புருஷனுக்கும் ஈசுவரனுக்கும் உள்ள சம்பந்தம் மகா புனிதமானது: அவர்களுக்கிடையில் வேறு உதவிகளைக் கற்பிப்பது குற்றம். கடவுள் பேசும்போது ஒரு ஏகதேசப்பொருளின் ஞானத்தை அன்று, சமஸ்தத்தின் ஞானத்தையும் தருவதாக இருத்தல்வேண்டும்; கடவுள் தன் வாக்கின் நாதத்தால் சகமனைத்தையும் நிரப்பல்வேண்டும்; இந்த நிமிஷத்தில் அருளும் சமாதிநிலையில் சோதி, பிரகிருதி, காலம், ஆத்மாக்கள், எல்லாவற்றையும் கண்ணுக்கெதிரில் வாரி இறைத்துவிடல் வேண்டும்; சகலத்தையும் நூதனமாகச் சிருஷ்டித்து என்னிடத்தில் ஒரு நவயுகத்தை உண்டாக்கிவிடவேண்டும். ஒரு களங்கமற்ற சித்தத்தில் பரஞானம் பிறக்கும்போது, பழையன எல்லாம் பறந்தோடிவிடுகின்றன — சாதனங்கள், ஆசாரியர்கள்,வாக்கியங்கள்,ஆலயங்கள், சகலமும் சாய்ந்து விழுந்து

விடுகின்றன. * அந்த ஞானி இறந்தகாலம் வருங்காலம் இரண்டையும் தனக்குள் அந்தர்க்கத மாக்கிக்கொண்டு நிகழ்காலத்தில் ஜ்வலிக்கிறான். அவனை எது தொட்டா லும் சரி, அது உடனே பாவனமாகிவிடுகிறது. சகலத்துக் கும் மூலகாரணம் அவனுக்குள் சான்னித்தியமாக இருப் பதால் அவன் சன்னிதானத்தில் சகல பதார்த்தங்களின் அயதார்த்த பாகமெல்லாம் அழிந்துபோய் யதார்த்தபாகம் மாத்திரம் தங்கிநிற்கிறது. பிரம்மாண்டமான அற்புதத் தில் சிறிய, அற்பமான அற்புதங்களெல்லாம் மறைந்து விடுகின்றன. ஆகையால் நான் ஈசுவரனை அறிவேன் என்று சொல்லுகிற ஒருவன் வேறு தேசத்தில், வேறு உலகத்தில் உள்ள ஒரு புராதன ஜாதியாரின் பாஷையில் பேசவருவானானால் அவனை நீ நம்பவேண்டாம். † விதை யின் பலனான விருக்ஷத்தைவிட விதை பெரிதாகுமா?

---

* தந்திரமான தவம்தனில் நிற்போர்க்கு
மந்திரம் ஏதுக்கடி? குதம்பாய்,
மந்திரம் ஏதுக்கடி?

சத்தியமான தவத்தில் இருப்போர்க்கு
உத்யமம் ஏதுக்கடி? குதம்பாய்,
உத்யமம் ஏதுக்கடி?

குதம்பைச் சித்தர்.

† சாத்திரங்கள் ஓதுகின்ற சத்த நாத பட்டரே,
வேத்திரைப்பு வந்தபோது வேதம் வந்து உதவுமோ?
மாத்திரைப் போது உம்முளே மறித்து நோக்க வல்லிரேல்,
சாத்திரப்பை நோய்கள் ஏது? சத்தி, முத்தி, சித்தியே!

சிவவாக்கியம் (கச).

**யாவாந் அர்த்த்ஹ உதபானே, ஸர்வத: ஸம்ப்லுதோதகே,**
**தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:**

**பகவத்கீதை உ. சசு.**

3486

பிதாவின் பரிபூரண சக்தியைப் புகட்டப்பெற்ற புத்திரனை விடப் பிதா சிரேஷ்டனுவாஞ? அப்படியாஞல் ஏன் பண்டைக்காலத்துச் சங்கதிகளை ஒருவன் இவ்விதம் போற்ற வேண்டும்? புருஷனுடைய ஆரோக்கியத்தையும் வீரியத்தையும் வாங்கிவிடுவதற்கென்றே இந்தப்பழைய யுகங்கள் சூழ்ச்சி புரிந்துகொண்டிருக்கின்றன. காலமும் தேசமும் கேவலம் கண்ணுல் சிருஷ்டிக்கப்படுகிற வர்ணபேதங்கள் தாம். ஆத்மாவோ ஜோதிஸ்வரூபம். அது இருக்குமிடத்துப் பகல் ஜ்வலிக்கும். அது இருந்த இடத்திலோ இருள்தான் மூடியிருக்கும். இதிகாசம் மாத்திரம் என்னுடைய வாழ்க்கையைப் பற்றியும் என்னுடைய வளர்ச்சியைப்பற்றியும் பேசுகிற ரஸமான உபாக்கியானமாக இல்லாத பக்ஷத்தில் கேவலம் அதிகப்பிரசங்கந்தான் அது, அது விஷமாகிவிடும்.

மனிதன் மருள்கிருன், நையப்பாட்டுப் பாடுகிருன். முதுகு வளையாமல் நிற்கமாட்டேனென்கிருன். நான் இப்படி நினைக்கிறேன், நான் இப்படித்தான் இருப்பேன் என்னுமல், ஒரு ரிஷி, அல்லது ஒரு மகாத்துமாவை உதாரணங் காட்டுகிருன். ஒரு பச்சைப் பசும் புல்லின் தாள், அப்பொழுது நெகிழ்ந்து கொண்டிருக்கும் ரோஜாமுகை, இவைகளைக் காணும்போது வெட்கித் தலை குனிந்துவிடுகிருன். இதோ இந்த ஜன்னல் வழியாகத் தெரிகின்றனவே, இந்த ரோஜா மலர்கள் முன் காலத்து ரோஜா மலர்களைப்பற்றிப் பேசுவதில்லை, தங்களை விட உயர்ந்த மலர்களைப்பற்றிப் பேசுவதில்லை. தங்களை நோக்கியே தான் அவை மலர்ந்திருக்கின்றன. இன்று அவை பாம்

பொருளின் சன்னிதானத்தில், பரம்பொருளோடு கூட நின்றுகொண்டிருக்கின்றன. ரோஜா மலர் வேறொன்றை யும்பற்றிச் சிந்தியாமல் கேவலம் தானேயாக இருக்கிறது. அது மலர்ந்திருக்கும் நேரம் ஆதியோடந்தமாக அது சம் பூரணமான நிலையிலேயே நிற்கிறது. ஒரு குருத்து தளிர்க்கும் முன்னர் அதன் பிராணன் அனைத்தும் அத னுள் பொங்கிக் கொந்தளித்துக்கொண்டிருக்கின்றது. விரிந்த மலரில் அதை விட அதிகமானது ஒன்றுமில்லை. காய்ந்துபோன வேரிலும் அதைவிட ஒன்றும் குறைவாக வில்லை. அது எப்பொழுதும் ஒரே ரீதியாகத் தனக் குள்ளே களிக்கின்றது, பிரகிருதியைக் களிப்பிக்கிறது. ஆனால் மனிதனோ, ஒன்று நாளையைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறான், அல்லது போனதை நினைத்துப் பார்த் துக்கொண்டிருக்கிறான். நிகழ் காலத்தில் ஆனந்தத்தை அனுபவிக்கமாட்டேனென்கிறான். கண்ணைத் திருப்பிக் கொண்டு சென்றதை நினைந்து நோகிறான், அல்லது, தற் பொழுது அவனைச் சூழ்ந்திருக்கும் செல்வத்தை லக்ஷியஞ் செய்யாமல் குதிகாலில் எழும்பி நின்றுகொண்டு வருங்கா லத்தை எட்டிப்பார்க்கிறான். காலத்தை வென்று நிகழ் காலத்தில் பிரகிருதியோடு கலந்து வாழும் வரை அவனுக் குச்சுகமும் வராது, வலிமையும் வராது.

இது வெட்ட வெளிச்சம். அப்படி இருந்தும், தாவீ தோ, யெரேமியாவோ, பௌலோ, அல்லது வேறு யாரோ, இவர்களுடைய வாக்கின் வாயிலாக ஈசுவரன் பேசா விட்டால் அவன் வாக்கை லக்ஷியம் செய்யமாட்டேன் என்று எத்தனை மேதாவிகள் உட்கார்ந்துகொண்டிருக்கி

றூர்கள் பார்! ஏதோ சில வாக்கியங்களுக்கும் ஏதோ சில சுலோகங்களுக்கும் நாம் எப்பொழுது பார்த்தாலும் இத்தனை மதிப்பு வைத்துக்கொண்டிருக்க மாட்டவே மாட்டோம். குழந்தைகள் பேசக் கற்பதை நாம் உதாரணமாகக் கொள்ளவேண்டியது. அவர்கள் பாட்டிகளும் உபாத்தியாயர்களும் சொல்லித் தருகிற வார்த்தைகளை மனப்பாடம் செய்கிறூர்கள்; கொஞ்சம் வயதானதும் அவர்களுக்குத் தென்படுகிற சாமர்த்தியவான்கள், ஆத்மவான்கள் இவர்கள் பேசும் வார்த்தைகளையும் அப்படி அப்படியே சிரமப்பட்டு நினைத்துப் பார்த்துக்கொண்டு பேசுகிறூர்கள்; முடிவில், யாரிடமிருந்து பதங்களைக் கற்றூர்களோ அவர்களுடைய மன நிலை தங்களுக்கு வந்ததும் அவைகளின் பொருள்களை நன்குணர்ந்துகொண்டு பதங்களை அலக்ஷியம் செய்துவிடுகிறூர்கள்; ஏனெனில் சமயோசிதமான வார்த்தைகள் அவர்களுடைய நாவிற்குத் தாமே வருகின்றன. நாம் யதார்த்தத்தையே பொருந்தி வாழ்ந்தோமானல் நம்முடைய திருஷ்டியும் சமதிருஷ்டியாகும். பலஹீனனுக்குப் பலஹீனம் எவ்வளவு சகஜமோ அவ்வளவு சகஜம் பலவானுக்குப் பலம். புதுத் தோற்றம் நமக்கு உண்டாகும்போது நாம் இனிமேல் பழைய சரக்குகளையெல்லாம் சித்தத்தினின்று குப்பை பெருக்குவதுபோலப் பெருக்கித் தள்ளிவிடக்கடவோம். ஒரு மனிதன் ஈசுவர சான்னித்தியத்தை அடைந்துவிட்டானுல் அவனுடைய வாக்கு சிற்றூற்றின் முரலலைப் போலவும், நெற்பயிரில் காற்று வீசும்போது எழும் இன்னிசையைப்போலவும் காதுக்கு இனிமையாக இருக்கும்.

இந்த விஷயத்தைக் குறித்த அந்தரங்கமான சத்தியம் இங்கே இதுவரை சொல்லப்படாமல் பாக்கியாக இருக்கிறது; அதை வார்த்தையால் சொல்லுவது அனேகமாய் அசாத்தியம்; ஏனெனில் நாம் சொல்லக்கூடியது அனைத்தும் உள்ளே ஸ்புரிக்கிற பரஞானத்தின் மந்தமான நினைவுதான்.* தற்காலம் என் கைக்கு அகப்பட்டமட்டில் அந்த ரகசியத்தைச் சொல்லுகிறேன். பரம்பொருளானது உன்னை நெருங்கும்போது மனிதருக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கிற மார்க்கத்தால் வந்து நெருங்குவதில்லை. நீ ஆத்ம வாழ்க்கையில் இறங்கும்போது பழைய வழிகளால் இறங்கமாட்டாய்; அங்கே வேறொருவனுடைய காற்சுவடுகளைப் பார்க்கமாட்டாய்; மனிதருடைய முகத்தை நோக்கமாட்டாய்; ஒருவனுடைய பெயரையும் கேட்கமாட்டாய்; அந்த நலமும், அதன் ஞானமும், அது வரும் மார்க்கமும் முற்றிலும் தனியாக, நூதனமாக இருக்கும்; அது அனுபோகத்துக்கெல்லாம், உதாரணங்களுக்கெல்லாம் அதீதமாக விருக்கும். மனிதரிடத்துத்தான் ஞானசாதனங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் கற்ற சாதனங்களே அன்று முடிவு. இந்த நாள் வரையில் ஜீவித்து வந்திருக்கிற சகல மனிதர்களும் நாம் ஏற்படுத்திக்கொள்ளும் சாதனத்துக்கு வழி காட்டிகள் தாம். அவர்களுடைய மார்க்கங்களில் நமக்கு வேண்டிய அமிசங்களை எடுத்துக்கொள்ளுகிறோம், மற்றப் பாகங்களை அவர்களுடைய நாமதேயத்துடன் தூர ஒதுக்கிவிடுகிறோம். சாதனம் செய்வதில் பயம் ஆசை, இவை யிரண்டையும் தள்ளி

---

* யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸாஸஹ.

விடவேண்டும். சித்தியின் பேரில் வைக்கும் ஆசை கூடக் கௌரவமானதன்று. சமாதி நிலையில் இருதஞ் ஞதை என்பதற்காவது சந்தோஷம் என்பதற்காவது இடமே யில்லை. ராகத் துவேஷாதிகளையெல்லாம் தாண்டி விட்ட ஆத்மாவானது எங்குபார்த்தாலும் அபேதத்தை யும் அனுதியான சிருஷ்டிக் கிரமத்தையும் காண்கிறது; சத்தியமும் தர்மமும் வேறொன்றையும் ஆசிரயிக்காமல் சுயம்புவாக இருக்கிறதாக உணருகிறது; உலகத்தில் நடப் பதெல்லாம் நல்லதே என்று தெளிந்து உபசாந்தத்தை எய்துகிறது. பிரபஞ்சத்தின் பிரம்மாண்டமான வெளி கள், அட்லாண்டிக் சமுத்திரம், தென் கடல், அலகில்லாத நாட்கள், வருஷங்கள், நூற்றாண்டுகள், எல்லாம் அதற்கு லேசமாத்திர மாகிவிடுகிறது. இப்பொழுது நான் நினைக் கும் நினைவும் அனுபவிக்கும் அனுபவங்களும் இப்பொ ழுது எவ்விதமோ அவ்விதமே என்னுடைய முந்தின நிலைகள் அனைத்திலும் அந்தர்க்கதமாகவே இருந்திருக் கின்றன. ஜனனம் என்று சொல்லுவதிலாகட்டும் மாணம் என்று சொல்லுவதிலாகட்டும் எதிலும் அவை அகலாம லிருந்தே தீருகின்றன.

இப்பொழுது வாழும் வாழ்வு தான் காரியமே யொழிய முன் வாழ்ந்த வாழ்வு காரியமில்லை. முயற்சியை ஒருவன் நிறுத்திவிடும் அதே நிமிஷத்தில் சக்தி அவன் கையைவிட்டு நழுவிவிடுகிறது. சக்திக்கு வீற்றிருக்கை எது? பழைய நிலைமை இதோடு தீர்ந்தது என்று முடிவு செய்துவிட்டு, புதிய செயல் ஒன்றைத் துவக்குவதற்கு முன் நிற்கும் மன உறுதியும், பழைய செயலின் இறுதிக்

கும் புதிய செயலின் துவக்கத்திற்கும் மத்தியில் பிரம்மாண்டமான பாதாளம் இருக்கிறதே அதைத் தாண்டி விட்டுத் தன்னுடைய நோக்கத்தை நோக்கிப்பாயும்பாய்ச்சலும் தாம் சக்தியின் வாசஸ்தானம். ஒருவனுக்குக் கால பலத்தினால் இது நேர்ந்தது என்னும் வார்த்தையைக் கேட்கும்போது உலக சக்தியானவள் காய்கிறாள். ஏனெனில், அச்சொல் சென்ற காலத்தின் கௌரவத்தை அழித்துவிடுகிறது, ஊக்கமாகிற செல்வத்தைத் தேய்த்துவிடுகிறது, புகழைக் கெடுத்துவிடுகிறது, மகாத்மாவுக்கும் பாபிக்கும் உள்ள தாரதம்மியத்தைப் போக்கிவிடுகிறது, இயேசு, யூதாஸ், என்னும் இவர்களிருவரையும் ஒரேரீதியாக மூலையில் கொண்டுபோய்த் தள்ளிவிடுகிறது. அந்த வார்த்தை சத்தியமானால் ஆத்ம விசுவாசம், ஆத்ம பலம் என்கிறதெல்லாம் வெறும் பேச்சாகவல்லவா ஆகிவிடும்? ஆத்மா இவ்விடத்தில்சான்னித்தியமாக இருக்கும்போது அதனுடைய சக்தி வேறொன்றை ஆசிரயித்த சக்தியாக இராது—கேவலம் கிரியா சக்தியாகத் தானிருக்கும். ஆசிரயத்தைப்பற்றிப் பேசுவதெல்லாம் வீரியமற்ற, புறம்பான வார்த்தைகள். எது உறுதியாகத் தன்னைத் தானே நம்புகிறதோ அதைப்பற்றிப் பேசு. அதுதான் தொழில் புரிகிறது, அதுதான் உளது. எவனொருவன் என்னைக் காட்டிலும் அதிகமாகத் தன் அந்தராத்மாவுக்கு அடங்கி நடக்கிறானோ, அவன் விரலைக் கூட அசைக்கவேண்டாம், என்னை வென்றுவிடுகிறான். மனோலோகத்து ஆகர்ஷண தர்மத்தின் பிரகாரம் நான் அவனைச் சுற்றிச் சுழலுகிறேன். அறத்தின் உயர்வு என்னும்போது அது கேவலம்

ஒருவித அலங்காரம் என்று நாம் நினைக்கிறோம். அறம் தான் உயர்வு என்பது என்று நமக்கு இன்னும் தெரிய வில்லை. தர்மத்தை மனப்பூருவகமாய் ஆசரிக்கும் மனிதன் அல்லது மனிதக் கூட்டத்திற்கு அவ்விதம் ஆசரிக்காத நகரங்களையும், ஜாதிகளையும், அரசர்களையும், தனவான்களையும், கவிகளையும் வலியழித்து வெல்லும்படியான சக்தி வந்துவிடுகிறது என்பது இயற்கையின் விதி. ஆனால் இது நமக்கு இன்னும் தோற்றவில்லை.

எல்லாம் நித்தியானந்த ஏக வஸ்துவினுள்ளே அடங்கியிருக்கிறது என்கிற முடிவுதான் மற்றெல்லா விவகாரங்களினின்றும் ஏற்படுவது போலவே இந்த விவகாரத்தினின்றும் நமக்கு ஏற்படுகிறது. நிராலம்பநிலைதான் ஆதிமூலப்பொருளின் லக்ஷணம். மற்றப் பொருள்களினிடத்து அந்த நிராலம்பநிலை நிகழும் அளவுதான் அவைகளின் நலத்தின் அளவும். தங்கள் தங்களுடைய தர்மத்தை உள்ளடக்கி வைத்துக்கொள்ளுகிற வரையில் தான் பொருள்கள் நிலைக்கின்றன. வியாபாரம், பயிர்த்தொழில், மிருகவேட்டை, திமிங்கலவேட்டை, போர், சொல்வன்மை, செல்வாக்கு இவைகள் ஒவ்வொன்றிலும் ஓர் ஓர் விதமான கௌரவம் இருக்கிறது; அவைகளுக்குள்ளே நின்றியங்கும் அறம் சுத்தமின்றிக் கலப்புற்றதாக இருந்தபோதிலும், அவைகளுள் இருக்கும் அறம் மாத்திரத்திற்கு எனக்கு அவைகளிடத்து மதிப்பு ஜனிக்கிறது. இதே விதிதான் பிரகிருதி முழுவதிலும் தற்காப்புக்கும் விருத்திக்கும் காரணமாக இருந்துவருகிறது. இயற்கையின் ராஜ்ஜியத்தில் ஒரு பாத்தியம் வேண்டுமானல்

அதற்கு வேண்டிய சக்தி அவசியம் வேண்டும். தன்னைத் தானே காத்துக்கொள்ள வன்மையில்லாத பொருளைப் பிரகிருதி காப்பாற்றுகிறதில்லை. வானத்தில் தோன்றும் ஒரு கிரகத்தின் உற்பத்தி, அதன் வளர்ச்சி, அதன் சமநிலை, அதன் மண்டல கதி, பலமான காற்றில் வளைந்தும் பழைய படி நிமிர்ந்துகொள்ளும் மரம், தாவரங்கள், ஜந்துக்கள் ஆகிய இவை அனைத்திலும் தன்னையன்றி வேறு ஆசிரயங்களை வேண்டாத ஆத்மாவின் பிராணசக்தி உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குகிறது.

ஆகவே, எல்லாம் அந்தர்முகப்படுகிறது. நாம் எங்கும் ஓடித் திரியவேண்டாம். வீட்டில் காரணத்தின் சன்னிதானத்தில் உட்காருவோம். நம்மிடம் அழையாது வரும் மனிதக் கூட்டத்தையும், நூல்களையும், மடங்களையும் இந்தப் பேருண்மையைச் சொல்லி நடுங்கச் செய்து விடுவோம். உள்ளே பிரவேசிப்பவரை மிதியடிகளை வெளியில் வைத்துவிட்டு வெறுங்காலோடு வரச்சொல்! ஏனெனில், உள்ளே சர்வேசுவரன் இருக்கிறான். நம் இயற்கை யறிவுக்கு அவர்கள் பதில் சொல்லட்டும். அதன் நலத்துக்கெதிரே உலகத்தோர் செல்வமும் பிரகிருதியின் வனப்புங்கூட மங்கிவிடும். நாம் மாத்திரம் நம்முடைய ஆத்ம தர்மத்தின் வரம்பைக் கடவாதிருத்தல் வேண்டும்.

ஆனால் நாம் தற்காலம் வெறுஞ்சந்தைக் கூட்டமாகத் தான் இருக்கிறோம். மனிதனிடத்தில் மனிதனுக்குப் பய பக்தியைக் காணோம். வீட்டிலேயே தங்கி, தனக்குள் ளேயே இருக்கும் சமுத்திரத்தில் கலந்துகொள்ளுவது

அவனுடைய சுபாவத்திற்குச் சம்மதமாகவில்லை: மற்ற மனிதர்களிடம் போய் ஒரு பஞ்சபாத்திரம் ஜலத்துக்குக் கை கட்டிக் காத்துக்கொண்டிருக்கிறான். நாம் தனி வழி செல்லவேண்டும். கோயிலில் நடக்கும் பிரசங்கத்தைவிட, பூஜை துவக்குமுன் அங்கே இருக்கும் நிச்சப்தம்தான் எனக்கு நன்றாக இருக்கிறது. மனிதர்கள் தங்களை ஒரு பிரத்தியேகமான தர்மமேகம் சூழ்ந்துவரும்படி வாழ்வார்களேயானால், அவர்களிடத்தில் எத்தனை சாந்தம், எத்தனை சீலம், எத்தனை மகிமை ஜ்வலிக்கும்! நாம் எப்பொழுதும் இவ்விதமே பரம ஏகாந்தமாக இருக்கலாம். மனைவி, மக்கள், பிதா, நண்பன் முதலியவர்கள் என் கிரகத்திலிருக்கிறார்களென்றால், அவர்கள் என்னோடு இரத்தக் கலப்புள்ளவர்களென்றால் அவர்களுடைய குற்றங்களை நான் ஏன் ஏன்றுகொள்ளவேண்டும்? மனித ஜாதி அனைத்திலும் என் இரத்தம் இருக்கிறது, எனக்குள்ளும் மனித சமூகம் அனைத்தின் இரத்தமும் இருக்கிறது. ஆகையால் இரத்தக் கலப்பை மாத்திரம் நினைத்து அவர்களுடைய வெடுவெடுப்புக்கும் அறிவீனத்துக்கும் நான் பாத்தியப்படமாட்டேன். அவைகளை நினைத்து வெட்கப்படக் கூட மாட்டேன். ஆனால் இந்தத் தனிமை ஜடரீதியானதாக இருக்கக்கூடாது, ஆத்மீயத் தனிமையாக இருக்கவேண்டும். அதாவது அது உயர்வாக இருத்தல்வேண்டும். சில வேளைகளில் உன்னை வீண்காரியங்களுக்கு அழைக்க உலகம் முழுவதும் ஒன்றுகூடிப் பிரயத்தனப்படுவதுபோல் இருக்கும். சிநேகிதன், அனுசரன், குழந்தை, பிச்சைக்காரன் வியாதிஸ்தன், பயங்காளி, வறியவன், எல்லோரும்

ஒருங்கு சேர்ந்து நீ ஏகாந்தமாக இருக்கும்போது உன் கதவைத் தட்டி, எங்களிடம் வரவேண்டும், எங்களிடம் சற்றுப் பேசவேண்டும் என்று அழைப்பார்கள். ஆனால் நீ உன் நிஷ்டையைக் கலைத்துக்கொண்டு அந்த அலமாலில் புகுந்துவிடாதே. உன் உறுதியற்ற சஞ்சலபுத்திதான் மற்றவர்களுக்கு உன்னைத் தொந்தரை செய்யக்கூடிய சக்தியைத் தருகிறது. உன்னுடைய உடந்தையின்றி ஒருவனும் உன்னிடம் வரமுடியாது. "எதன்பேரில் சுத்த அன்பு செலுத்துகிறோமோ அது நமக்குச் சித்திக்கிறது: ஆனால் காமித்துக் காமித்து நம் மனதிலுள்ள சுத்த அன்பைக் கொன்றுகொள்ளுகிறோம்," என்று ஒரு மகான் கூறுகிறான்.

இந்தத் திடநம்பிக்கை, ஆத்மசேவை, என்கிற பரிசுத்தமான படியில் இப்பொழுதே ஏற நமக்கு வலிமையில்லையானால், நமது உட்பகைகளையாவது இப்பொழுது எதிர்க்கக்கடவோம். நமது ஸாக்ஸோனிய இருதயத்தில் தோரணையும் வேதனையும் கிளப்பி, அஞ்சாமையையும் பிடிவாதத்தையும் ஏற்றி, போர்க்களத்தில் புகுவோம். இந்த வழவழ கொழகொழவான காலத்தில் சத்தியத்தை ஒளியாமல் பேசுவதுதான் இதற்கு வழி. இந்தப் பொய்ச் சிநேகத்தையும், பொய் மரியாதையையும் நிர்த்தாக்ஷண்ணியமாக வெட்டிவிடு. தாங்களும் ஏமாந்துகொண்டு மற்றவர்களையும் ஏமாற்றிக்கொண்டு திரியும் உன் பந்து மித்திரர்களின் இஷ்டப்படி நடவாதே. அவர்களைக் கூப்பிட்டுப் பின்வருமாறு சொல்லிவிடு: "ஏ தந்தையே, ஏ மனைவியே, ஏ சகோதரனே, ஏ நண்பனே, நான் இது

வரை உங்களோடு உலக நடையின் அனுசாரமாக நடந்து வந்தேன்; இது முதல் நான் சத்தியப் பொருளின் அடிமையாய்விட்டேன். பாரமார்த்திக தர்மம் ஒன்றைத் தவிர வேறு எந்தத் தர்மத்துக்கும் நான் இனிமேல் தலைவணங்க மாட்டேன் என்பதை அறிந்துகொள்ளுங்கள். எனக்கு இனிமேல் நியமங்கள் வேண்டாம், அனுபவம்தான் வேண்டும்; என் மாதா பிதாக்களையும் குடும்பத்தையும் ரக்ஷிக்க முயலுவேன் என்பதற்கும், ஏகபத்தினிவிரதனாக இருப்பேன் என்பதற்கும் தடையில்லை; ஆனால் இதெல்லாம் மற்றவர்கள் செய்கிறபடி செய்யாமல் புது மாதிரியாகத்தான் செய்வேன். உங்கள் வழக்கங்களையும் ஆசாரங்களையும் நான் ஒப்பமாட்டேன். என்னுடைய இச்சைப்படிதான் நடப்பேன். யாருக்காகவும் இனிமேல் நான் தளர்ந்துகொள்ளமாட்டேன்; என்னுடைய சுபாவத்தைக் கண்டு நீங்கள் என்பேரில் அன்பு செலுத்தினால் முன்னிலும் அதிக சுகத்துடன் நாம் வாழலாம்; அப்படிச் செய்ய உங்களுக்குத் தற்காலம் முடியவில்லையானால், உங்கள் அன்புக்கு என்னை அருகனாக்கிக்கொள்ள முயலுவேன். என்னுடைய ருசி விருசிகளை ஒளிக்கமாட்டேன். எது உள்ளத்தின் ஆழத்திலிருந்து வருகிறதோ அது பவித்திரமானது என்று கெட்டியாய் நம்பி, அந்தரங்கத்தில் எது எனக்கு உவக்கின்றதோ, எதை எனது இருதயம் கட்டளையிடுகின்றதோ, அதைப் பயமின்றிச் சூரிய சந்திரர்களுக்கெதிரில் செய்யத் துணிவேன். உங்களிடம் சால்பு இருந்தால் உங்களை விரும்புவேன்; இல்லாவிட்டால், மேலுக்கு மாத்திரம் மரியாதையும் நட்பும்

காட்டி உங்களுக்கும் தீங்கிழைத்து எனக்கும் தீங்கிழைத் துக்கொள்ளேன். நீங்களும் மெய்ந் நெறியில் நின்று கொண்டு வேறு ஒரு தர்மத்தை ஆசரிக்கும் பக்ஷத்தில் உங்களுக்கேற்ற சகாக்களைத் தேடிக்கொள்ளுங்கள், நான் எனக்கேற்றவர்களைத் தேடிக்கொள்ளுகிறேன். இதுவும் அகம்பாவத்தினால் நான் செய்வதில்லை, அடக்கம் நிறைந்த சுத்த அந்தக்காணத்துடன் செய்கிறேன். எத்தனை நாள்தான் பொய்யிலேயே உழன்றிருந்த போதிலும், மெய்யை நாடி அதில் நிலைப்பதில் உங்களுக்கும் எனக் கும் மற்றெல்லா மனிதருக்கும் லாபமிருக்கிறது! இன் றைக்கு நான் சொல்லுகிறதெல்லாம் கடுமையாகத் தோன் றுகிறதோ? கூடிய சீக்கிரத்தில், உங்களுடைய சுபாவ மும் என்னுடைய சுபாவமும் என்ன கட்டளையிடுகின்ற னவோ அதை நீங்களே அபிமானிக்கக் கற்றுவிடுவீர்கள்; சத்தியத்தையே நாம் துணையாகக் கொள்வோமானல் அது முடிவில் நமக்கு இனிமையே தரும்.”

ஆமாம், ஆனல் இந்தச் சினேகிதனுடைய மனது நோகுமே, என்று ஒருவன் சொல்லும் பக்ஷத்தில் நான் பதில் சொல்லுவேன்: நியாயம் தான், ஆனல் அவ னுக்கு மனம் கோணுமலிருக்கவேண்டி என் சுவாதீ னத்தையும் சக்தியையும் விற்றுவிட என்னல் முடியாது. தவிர, பாரமார்த்திக உண்மையின் பக்கம் திரும்பும்போது எல்லோருக்கும் அறிவு விளக்கம் பெறும் நேரம் ஒன்று வருகிறது. அப்பொழுது அவர்களும் நான் இப் பொழுது சொல்லுவதை ஒப்புக்கொண்டு நான் செய்யும் வண்ணமே செய்வார்கள்.

ஒருவன் தங்களுடைய ஆசாரங்களை விட்டுவிட்டால், சமஸ்த ஆசாரங்களையுமே விட்டுவிட்டு விராத்தியனாகப் போய்விட்டான் என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். அதற்கேற்ப போகாதுானும் ஞானப் பேச்சுகள் பேசித் தன்னுடைய அதிக்கிரமங்களை நல்லொழுக்கங்களென்று காட்ட முயற்சிக்கிறான். ஆனால் ஆத்தியாத்மிக தர்மம் போய் விடுகிறதில்லை. ஒவ்வொருவனுக்கும் பொது ஜன சம்சதி, தன்னுடைய உள்ளம், என்கிற இரண்டு அவைக் களங்கள் இருக்கின்றன. அவைகளுள் ஏதாவது ஒன்றில் நம்முடைய ஒழுக்கங்களுக்குச் சமாதானம் சொல்லித் தீர வேண்டும். என்னுடைய கடமைகளை நான் நேரான மார்க்கமாகச் செய்யலாம், அல்லது சுற்றுவழியாகச் செய்யலாம். அன்னை, பிதா, மாமன், மைத்துனன், பக்கத்து வீட்டுக்காரன், ஊரார், நாய், பூனை, இவர்களெல்லோருக்கும் நான் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தாகிவிட்டதா? அவர்கள் என்பேரில் குறைகூற இடமிருக்கிறதா? என்று நான் பார்த்துக்கொண்டிருக்கலாம். ஆனால் இந்தச் சுற்று வழியைத் தள்ளிவிட்டு என்னுடைய அந்தக்கரணத்தை மாத்திரம் கவனித்துக்கொண்டு அது ஒப்பும்படியாக மாத்திரம் நடந்துகொள்ளலாம். என் உள்ளமாகிற சக்ரம் நான் தவறு செய்யும்போது என்னை நிர்த்தாக்ஷிணியமாய் ஆக்கினை செய்யும். கடமைகள் என்று உலகத்தில் சொல்லப்படுகிற அனேக கருமங்களை என் உள்ளம் கடமைகளாக ஒப்புவதில்லை. ஆனால் அதன் ஆக்கினைகளை நான் நிறைவேற்றிவிட்டால் உலகத்துக் கடமைகளைத் திரஸ்கரிக்க அது எனக்கு அதிகாரம் கொடுத்து

விடுகிறது. இது நிரம்பச் சுலபமாக இருக்கிறதே என்று ஒருவன் யோசிக்கும் பக்ஷத்தில், அவன் ஒரு நாளைக்கு அந்தப்படி நடந்து பார்க்கட்டும்!

சாமானிய ஜனங்களுக்கு இருக்கக்கூடிய யோசனைகளையெல்லாம் விட்டுவிட்டு, தனக்குத் தானே கார்பாரியாக இருந்து நடத்திக்கொள்ளத் துணிகின்ற மனிதனிடம் ஒரு தெய்வத்தன்மை இருக்கவேண்டும் என்பதில் சந்தேகமேயில்லை. அவன் இருதயம் கம்பீரமானதாக இருந்திடுக! அவன் மனது உண்மையில் நிலைத்திடுக! அவனுடைய அறிவு தெளிவாக இருந்திடுக! ஏனெனில் அவன் தனக்குத் தானே வாஸ்தவமான தருமசாஸ்திரமாகவும், மகா ஜன சமூகமாகவும், அரசனுடைய ஆணையாகவும் இருக்கவேண்டியதாயிருக்கிறது; ஏனெனில் மற்ற ஜனங்களுக்குப் பலாத்காரம் எப்படியோ அப்படி இருக்கவேண்டியிருக்கிறது அவனுக்கு ஒரு சாதாரணமான மனோநிச்சயம்

ஜன சமூகம் என்று சிறப்பாகச் சொல்லப்படும் கூட்டம் தற்காலம் இருக்கும் நிலைமையைக் கவனிக்கிறவனுக்கு, மேலே நாம் சொல்லியிருக்கிற தர்மாசரணை எத்தனை அவசியமானது என்பது நன்கு விளங்கும். இந்தக் காலத்து மனிதனைப் பார்க்கும்போது அவனுடைய இருதயமும் நரம்புகளும் உக்கிவிட்டன என்று சொல்லும்படி இருக்கிறது. நாம் தன்னம்பிக்கையிழந்த பேடிகளாய்விட்டோம். நமக்குச் சத்தியத்தைக் கண்டால் பயமாயிருக்கிறது, லாபம் கிடைத்தால் பயமாயிருக்கிறது; சாவை

348

நினைத்துப் பயப்படுகிறோம், ஒருவருக்கொருவர் பார்த்துப் பயப்படுகிறோம். பரிபூரணமான, காம்பீரியம் நிறைந்த மனிதர் நம் காலத்தில் பிறக்கக்காணோம். வாழ்க்கையையும் ஜனசமூகத்தின் ரீதியையும் முற்றிலும் மாற்றிப் புதுப்பிக்க உண்மையான புருஷர்களும் ஸ்திரீகளும் வேண்டியிருக்கிறது. ஆனால் நம்மில் பெரும்பாலருடைய சுபாவம் அவர்களுடைய சொந்த விவகாரங்களை நிர்வாகம்செய்யக் கூடச் சக்தியற்றதாக இருக்கிறது. அவர்கள் சக்திக்கு மிகவும் மீறினதாக இருக்கிறது அவர்களுடைய ஆசை. மனிதர் இரவு பகல் ஓயாமல் வேறொருவர் பேரில் சாய்ந்துகொண்டும் இரப்பு இரந்துகொண்டுமேதான் இருக்கிறார்கள். நமது குடும்ப ஏற்பாட்டில் கௌரவமில்லை. நமது கல்வி, தொழில், விவாகம், கொள்கை, ஒன்றையும் நாமாக நாம் நிர்ணயம் செய்துகொள்ளவில்லை; ஜனசமூகம்தான் நமக்காக நிர்ணயித்திருக்கிறது. நாம் வெறும் மடப்பள்ளி வீரர்கள் ஆகிவிட்டோம். விதியோடு கடும்போர் புரிந்து நமது வலிமையை விருத்தி செய்துகொள்ள நாம் அஞ்சுகிறோம்.

கையில் எடுக்கும் முதல் காரியங்கள் பலிக்காவிட்டால், நம் வாலிபர் மனம் தளர்ந்துபோய்விடுகிறார்கள். ஓர் யௌவன வியாபாரிக்கு நஷ்டம் வந்துவிட்டால் உடனே முறிந்துபோய்விட்டான் என்று மனிதர் சொல்லிவிடுகிறார்கள். மகா மேதாவி ஒருவன் நமது பள்ளிக்கூடங்களில் படிப்பை முடித்த பிறகு, அவனுக்கு ஒரு வருஷத்துக்குள் போஸ்டன், நியூயார்க்கு முதலிய நகரங்கள் அல்லது நகரவட்டங்களில் ஒரு வேலை கிடைத்துவிடா

விட்டால் அவன் மனத்தளர்ச்சி அடைவதும், ஆயுள்முழுவதும் குறை சொல்லிக்கொள்ளுவதும் நியாயம்தான் என்று அவனுடைய சிநேகிதர் நினைத்துவிடுகிறார்கள். ஆனால் வண்டி ஓட்டி, பயிர்செய்து, தட்டுத்தூக்கி, பள்ளிக்கூடம் வைத்து, பிரசங்கங்கள் செய்து பத்திரிகைகள் நடத்தி, காங்கிரெஸ் பிரதிநிதியாகி, ஒரு நகர வட்டத்தைவிலைக்கு வாங்கி, இப்படி வரிசைக்கிரமமாக, படிப்படியாக ஏறி, எப்படி விழுந்தாலும் நின்ற நிலையிலேயே கால் பூமியில் பாவும்படி விழும் பூனைபோல, சமாளித்துக் கொண்டுவரும் ஒரு நியூ ஹாம்ப்ஷயர் அல்லது வேர்மோண்டுப் பையன் இந்த மாதிரி நூறு நகரப்பதுமைகளுக்கு ஈடாவான். ஏனெனில் சென்றுகொண்டேயிருக்கும் நாட்களுக்குப் பின்னிடையாமல் அவைகளுக்குச் சரிசமனாக அவன் செல்லுகிறான். தான் ஏதாவது ஒரு தொழிலைக் கற்கவில்லை என்கிற லஜ்ஜை அவனுக்கிருப்பதில்லை, ஏனென்றால் இப்பொழுதே அவன் தொழிலில் இறங்கிவிட்டான். அவனுக்கு ஒரு வழி மாத்திரம்தான் என்பதில்லை, நூறு வழிகளிருக்கின்றன. ஒரு ஸ்தோயிக சித்தாந்தி மனிதர்களுடைய அடைபட்டுப் போயிருக்கிற சக்திகளைத் திறந்துவிட்டு, "நீங்கள் சாய்ந்துகொண்டு விழுகிற நாணற்போத்துகளல்லீர்; உங்களால் தனியாக நிற்கமுடியும், ஆகையால் நீங்கள் ஒன்றின்பேரிலும் சாயாமல் நேரே நிற்கவேண்டியது; தன்னம்பிக்கையைப் பயிலப் பயில உங்களுக்குப் புதிய சக்திகள் உண்டாகும்; மனிதனானவன் சரீரத்தில் வந்து அவதரித்திருக்கிற சாக்ஷாத் வேதமேயாக்கும்; உலகத்தில் சுகத்தையும்

க்ஷேமத்தையும் பரப்புவதற்காகத்தான் அவன் பிறந்திருக்கிறான்; நாம் அவனைக் கண்டு இரங்கினால் அது அவனுக்கு லஜ்ஜையை உண்டாக்கவேண்டும்; சட்டங்கள், புஸ்தகங்கள், விக்கிரகங்கள், பிம்பங்கள், பூர்வாசாரங்கள் இவைகளை யெல்லாம் குப்பையில் போட்டுவிட்டு அவனுடைய அந்தக்கரண தர்மத்தின் பிரகாரம் அவன் எந்த நிமிஷத்தில் நடக்க ஆரம்பிக்கிறானோ, அந்த நிமிஷம் முதல் நாம் அவனைக் கண்டு இரங்குவதில்லை, அவனைப் பூஜித்து அவனுக்குச் சமஸ்தோபசாரமும் செய்வோம்;—அவன்தான் மனிதனுக்குத் தேசளிக்கும் சற்குரு, அவனுடைய திருநாமத்தை இதிகாசம் அன்புடன் போற்றும்;" என்று அவர்களிடம் சொல்லமாட்டானா? *

---

* காமக்குரோதாதிகளையும் சுகதுக்காதிகளையும் ஜயித்து, மனதைச் சலியாததாக்கி, தர்மம் ஒன்றையே நோக்கமாகக்கொண்டு வாழ்க்கையை நடத்தவேண்டும் என்கிற கிரேக்கச் சித்தாந்தத்திற்கு ஸ்தோயிக மதம் என்று பெயர். அது கிறிஸ்து பிறக்க ௩0அ வருஷங்களுக்கு முன் அதேனா நகரத்தில் ஜேனோ என்னும் மகாத்மாவால் முதல் முதல் பிரசங்கிக்கப்பட்டது. மகா அலெக்ஸாந்தர் ஆரியாவர்த்தத்துக்கு வந்துவிட்டுப் போன உடன் காலையில்தான் இந்த மதம் பிறந்திருக்கிறபடியால் ஜேனோ இந்த மதத்தின் உள்மர்மங்களை நமது முன்னோரிடமிருந்து கற்றுக்கொண்டிருப்பான் என்னும் ஊகம் பொருந்தும். ஜேனோவே நேரே ஆரியாவர்த்தத்துக்கு வந்திராமற் போனாலும், ஆரியாவர்த்தத்திலிருந்து யவனத்து (கிரேஸு)க்குச் சென்றிருந்த ரிஷிகளுடைய அபிப்பிராயங்கள் யவனத்தில் மிகுந்து பரவியிருக்குமாதலால் இதில் அசாத்தியம் ஒன்றுமில்லை.

'மாத்ராஸ்பர்சாஸ்து கௌந்தேய சீதோஷ்ண ஸுக்ஹ து:க்ஹ
ஆகமாபாயினோ அநித்யா: தாம்ஸ்திதிக்ஷஸ்வ ப்ஹாரத, [தா:
யம் ஹி ந வ்யத்ஹயந்த்யேதே புருஷஸ்ய விபச்சித:
ஸமது:க்ஹ ஸுக்ஹம் த்ஹீரம் ஸோ அம்ருதத்வாய கல்பதே,'

என்ற சுலோகங்களில் அடங்கியிருக்கின்றன ஸ்தோயிகக் கொள்கைகள்.

இப்பொழுதைவிட அதிகமான ஆத்மவிசுவாசம் மாத்திரம் மனிதர்கள் மனதில் பிறந்துவிட்டால், அவர்களுடைய உத்தியோகமுறைகள், பாஸ்பர சம்சர்க்கங்கள் இவைகள் முழுவதிலும், அதாவது, அவர்களுடைய தர்ம நோக்கத்திலும், கல்வியிலும், காரியங்களிலும், வாழ்க்கையை நடத்தும் தோரணையிலும், சகவாசத்திலும், செல்வத்திலும், சத்திய விசாரணையிலும், ஒரு பிரம்மாண்டமான மாறுபாடு ஏற்பட்டுவிடும் என்பது தெள்ளிதில் விளங்கும்.

க. ஈசுவரனைப் பக்தி செய்யும்போது என்ன என்ன வரங்கள் மனிதர் வேண்டுகிறார்கள்! புரோகிதனுடைய தொழிலில் தைரியமும் புருஷத்தன்மையுமாவது இருக்க வேண்டுமே, இல்லை. பக்தியானது எங்கேயோ தூரத்தில் நோக்கிக்கொண்டு, தனக்கு அன்னியமான புண்ணிய பலத்தினால் தனக்கு அன்னியமான ஏதோ ஒரு பலனை வேண்டுகிறது; பிராகிருதம், அப்பிராகிருதம், அற்புதம், குருப்பிரசாதம், என்கிற முடிவற்ற விவகாரங்களைச் செய்துகொண்டு வீணே மடிகிறது. ஒரு தனியான நலனை வேண்டுகிற, பரிபூரணமான நலத்துக்கு ஈஷத்தேனும் குறைவாக விருக்கும் நலத்தை வேண்டுகிற, பிரார்த்தனை அதார்மிகமானது! பிரபஞ்ச காரியங்களைச் சர்வோன்னதமான நிலையினின்று பார்ப்பதுதான் பக்தி: அது சகலத்தையும் பார்த்துக்கொண்டு ஏகாந்தத்தில் ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருப்பதே: ஈசுவரனது அமிசம் தன்னுடைய சிருஷ்டியைக் கண்டு வியந்துகொள்ளுவதே. ஆனால் ஒரு சொந்தக் காரியத்தை நிறைவேற்றிக்கொள்

ளுவதற்காகக் கடவுளேப் பிரார்த்திப்பது அற்பத்தனமும் திருட்டுத்தனமுமேயாம். ஏனெனில் அது பகிர்லோகத்திலும் சித்தலோகத்திலும் இருக்கும் ஒருமையைத் தள்ளிவிட்டு, துவைதீபாவத்தைக் கொண்டுவருகிறது. ஈசுவரனிடத்தில் ஐக்கிய புத்தியை அடையும்போது மனிதன் இரக்கமாட்டான். அப்பொழுது அவன் தன் கருமத்தைச் செய்வதுதான் பிரார்த்தனே என்று கண்டு கொள்ளுவான். உத்தேசம் சிறியதாக இருந்தாலும், களே பிடுங்குகையில் உழவனும் துடுப்புத் தள்ளுகையில் மீகாமனும் மண்டிபோட்டு உட்காருவதும் உண்மையாகச் செய்யும் பிரார்த்தனேகளே. இந்தப் பிரார்த்தனேகளின் தொனி பிரபஞ்சமனேத்திலும் கேட்கிறது. பிளெச்சர் எழுதிய போந்துகா என்னும் நாடகத்தில், காராட்டாக் என்பவனே ஔதாத்தே என்னும் தெய்வத்தினிடத்துக் குறி கேட்கும்படி ஒருவன் சொன்னபோது,

> அவனுடை வாக்கெலாம் நம்முடைய ஆள்வினே
> தன்னிலே தானே இருக்கும், கண்டாய்!
> ஆற்றல் ஒன்றே அருளுடைத் தெய்வதம்!

என்று விடையளிக்கிருன் என்று வருகிறது.

பிரார்த்தனேப் போலிகளில் இன்னொரு வகுப்பு நம்முடைய இரங்கல்கள். அழுங்கல் என்பது தன்னம்பிக்கையும் மன உறுதியும் இல்லாமையே. இரங்குவதனுல் கஷ்டப்படுகிறவனுக்கு ஏதாவது உதவிசெய்ய முடியுமாஞல், இரங்கு; ஆனுல் அவ்விதம் உதவிசெய்ய முடியாவிட்டால் உன் காரியத்தைப் பார், கஷ்டம் தானே நீங்க ஆரம்பித்துவிடும். நாம் துக்கம் விசாரிப்பதும் அத்தனே

ஈனமாகவேதான் இருக்கிறது. அறிவின்றி அழுதுகொண்டிருப்பவருக்கு மின்னல் வெட்டுவதுபோலப் பேசிச் சுகத்தையும் சத்தியத்தையும் தருவதற்குப் பதிலாக அவர்களிடம் வந்து உட்கார்ந்து துணைக்கு நாமும் சேர்ந்து அழுகிறோம். உள்ளக்கிளர்ச்சிதான் ஜயத்தின் இரகசியம். தன்னைத் தானே எவன் கைதூக்கிவிட்டுக்கொள்ளுகிறானோ அவன்தான் தேவதைகளுக்கும் மனிதருக்கும் எப்பொழுதும் பிரியமானவன். அவன் எல்லோருக்கும் நல் விருந்து; அவனை எல்லோரும் புகழ்வார்கள், கௌரவப் படுத்துவார்கள், போகும் வழியெல்லாம் நேத்திரானந்தமாய்ப் பார்ப்பார்கள். அவன் நமது அன்பை வேண்டவில்லை; ஆகையாலேயே நம் இருதயம் அவனிடத்துச் சென்று அவனை அணைந்துகொள்ளுகிறது. அவன் நமது நிந்தையை லக்ஷியம்செய்யாது தனிமார்க்கமாகவே செல்லுகிறான்; அது காரணம்பற்றியே அவனிடம் நயந்துகொண்டு சிரத்தாவிசுவாசத்துடன் சென்று அவனைப் புகழ்ந்து போற்றுகிறோம். மனிதர்கள் அவனைப் பகைப்பதின் நிமித்தமே தேவர்கள் அவனை விரும்புகிறார்கள். "இடுக்கண்களைப் பார்த்துக் கலங்காமல் பிடிவாதத்தோடு முன் செல்பவனுக்கு உதவி புரியத் தேவர்கள் அதி வேகமாக வருகிறார்கள்," என்று ஜரதுஷ்டிரன் என்னும் ஈரானிய ஞானி சொல்லுகிறான்.

மனிதர் இப்பொழுது பிரார்த்திக்கும் பிரார்த்தனைகள் அவர்களுக்கு மன உறுதி இல்லை என்று காட்டுகின்றன போலவே அவர்களுடைய தற்காலக் கொள்கைகளும் அவர்களுக்கு அறிவு மழுங்கிப்போய்விட்டது என்று

காட்டுகின்றன. "கடவுளுடைய திருவாக்கு நேரே எங்கள் காதில் விழுந்தால் நாங்கள் இறந்துபோய்விடுவோம்; ஆகையால் அவன் பேசவேண்டாம், நீ பேசு அல்லது வேறு யாராவது பேசட்டும், நாங்கள் கீழ்ப்படிந்துவிடு கிறோம்," என்று சொன்ன யூத மூடர்போல மனிதர் பேசுகிறார்கள். என் சகோதரனுக்குள் இருக்கும் கட வுளை நான் தரிசிக்க முடிகிறதில்லை. ஏனெனில் அவன் தன் இருதயமாகிற ஆலயத்தின் கதவுகளைத் தாளிட்டு விட்டு, தன் சகோதரனுடைய அல்லது தன் சகோதரனுக் குச் சகோதரனுடைய தெய்வத்தைப்பற்றி வெறுங் கதை கள் சொல்லிக்கொண்டு திரிகிறான். ஒவ்வொரு தனி அறி வாளியும் ஒருபுதிய சாஸ்திரகர்த்தா. அவனுடைய அறிவு லாக், லவ்வாஸியே, ஹட்டன், பெந்தாம், பூரியே முதலா னவர்களின் அறிவைப்போல அசாதாரணமான ஊக்க மும் சக்தியும் வாய்ந்ததாக இருக்கும் பக்ஷத்தில் அவன் தன்னுடைய சித்தாந்தத்தை மற்றவர்கள் இருதயத்தில் புகுத்தி விடுவான், ஒரு மதத்தை ஸ்தாபித்துவிடுவான். தன்னுடைய யோசனைகள் எத்தனைக்கெத்தனை ஆழமாகச் செல்லுகின்றனவோ, தன் சிஷ்யனுக்கு அவன் விவக ரித்துக்காட்டக்கூடிய பொருள்களின் தொகை எத்தனைக் கெத்தனை அதிகமாக இருக்கின்றதோ, அத்தனைக் கத்தனை அறிவாளி ஆனந்த மடைகிறான். ஆனால் மதஸ்தாபகர் களிடத்துத் தான் நாம் மேலே சொல்லியிருப்பதின் உண் மை விசேஷமாய் விளங்குகிறது. ஒவ்வொரு மதமும், தர் மத்தைப்பற்றியும் கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றியும் தனக்குத் தோன்றியிருக்கிற

சில மூலாதாரமான சத்தியங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஒரு தீரன் ஏற்படுத்தும் பாகுபாடே யொழிய மற்றில்லை. கால்வினுடைய மதமும், குவேக்கர் மதமும், ஸ்வேதன்பர்க்கினுடைய மதமும் இப்படியே தான் பிறந்தன. ஸ்தாவர நூல் படிக்கும் ஒரு பெண்ணானவள் மண்ணிலும் ருதுக்களின் மாறுபாட்டிலும் புதிய அருத்தங்களைக் கண்டுகொண்டதனால் எப்படி அவைகளைப் பின்னும் பின்னும் சந்தோஷத்துடன் நினைத்துப் பார்த்துக்கொள்ளுகிறாளோ, அதுபோலச் சிஷ்யனும் தான் கற்றுக்கொண்டிருக்கிற புதிய பரிபாஷைகளில் மற்றெல்லாவற்றையும் விடப் பெரிய சாரமிச மிருக்கிறதாக நினைத்து வியந்துகொள்ளுகிறான். குருவின் அறிவைத் தியானஞ் செய்யச் செய்ய அவனுடைய அறிவின் சக்தி முதலில் வளரும். ஆனால் சமநிலையைப் பெறாத மனிதருக்கு வகுப்பானது வேதமாகிவிடுகிறது, அதைச் சீக்கிரத்தில் அதிக்கிரமிக்கவேண்டிய கேவலம் ஒரு சாதனம் என நினைக்காமல் அதுவேதான் புருஷார்த்தம் என நினைத்துவிடுகிறார்கள். அடிவானத்தை அண்டத்தின் எல்லையென்று நினைப்பதுபோலத் தங்களுடைய கொள்கையைச் சத்தியத்தின் முடிவுப் பொருளாகவே கருதி விடுகிறார்கள். வானத்து ஒளிகளெல்லாம் தங்கள் குரு கட்டியிருக்கிற வளைவிலிருந்துதான் தொங்குகின்றன என்று அவர்கள் நினைத்துவிடுகிறார்கள். அவர்கள் புறமதஸ்தர்களைப் பார்த்து, 'உங்களுக்குச் சத்தியம் எப்படித் தெரியும், சத்தியத்தைக் காணவே உங்களுக்கு அதிகாரமில்லையே,' என்பார்கள். அல்லது, எங்கள் கொள்கையி

லிருந்து சத்தியத்தை நீங்கள் திருடிக்கொண்டு போயிருக்கிறீர்கள்,' என்று சொல்லுவார்கள். ஒளியானது சகல வரம்புகளையும் தாண்டிக்கொண்டு, யாருக்கும் அடங்காததாய், எந்த அறைக்குள்ளே வேணுமென்றாலும்—அவர்களுடைய அறைக்குள்ளே கூட!— பிரவேசிக்கும் என்று அவர்களுக்குத் தெரிவதில்லை. ஆனால் அவர்கள் சற்று நேரம்தான் கீச்சிட்டுக்கொண்டிருக்கட்டுமே! நேர்மையும் தீரமும் மாத்திரம் அவர்களுக்கிருக்கும் பக்ஷத்தில், கூடிய சீக்கிரத்தில் தங்களுடைய கூண்டு மிகவும் கீக்கடமாயும் தாழ்வாயும் இருக்கிறதென்றும், சீக்கிரத்தில் கலைந்து, விழுந்து, அழுகி, அழிந்து போய்விடும் என்றும், எல்லையில்லாத சோதியானது கோடி பிம்பங்களினின்று பெருகுவதாய், கோடிவர்ணத்ததாய், பிரம்மாண்டம் அனைத்தும் வியாபித்து, முதல் சூரியோதயம் போல நித்திய யௌவனமாய், சர்வானந்தகரமாய், விளங்கிக்கொண்டே யிருக்கிறது என்றும் அவர்கள் கண்டுவிடுவார்கள்.

௨. யதார்த்தமான பயிற்சி இல்லாதிருக்கவே தான் கல்வி கற்ற அமெரிக்கர்களிடம் அன்னிய நாடுகளைப் பார்க்கவேண்டுமென்கிற மூட அவா குடிகொண்டிருக்கிறது. இத்தாலியா, இங்கிலாந்து, மிஸரம், இவையெல்லாம் அவர்களுக்கு இஷ்ட தெய்வங்கள். இங்கிலாந்தையும் இத்தாலியாவையும் கிரேஸையும் மகா க்ஷேத்திரங்களாகும்படி செய்தவர்களோ தாங்கள் இருந்த நாட்டை விட்டு அசையாமல் பூமிக்கு ஒரு அச்சாணிபோல நிலையாக நின்றவர்கள். புருஷத்தன்மை வளரும் வேளைகளில் நம்

முடைய கடமையைப் பார்க்கவேண்டிய இடம்தான் நாம் இருக்கவேண்டிய ஸ்தானம் என்று நமக்கே தோன்றும். ஆத்மா ஊர் சுற்றி அன்று. ஞானவான் வீட்டிலேயே தான் இருப்பான். அந்தந்தக் காலங்களில் வெளியே யாகட்டும், வேற்றுத் தேசங்களுக்காகட்டும், போகவேண் டிய கடமையோ அவசியமோ ஏற்படும்போது கூட யதார்த்தத்தில் அவன் அயலூர் செல்வதில்லை: அவன் முக விலாசத்தைப் பார்ப்பவர்களுக்கு, இவன் அறத்தையும் ஞானத்தையும் போதிக்க வரும் பரிவிராஜகன், இவன் நகரங்களையும் மனிதர்களையும் அரசன்போலப் பார்க்க வருகிறான், என்ற நினைவுதான் பிறக்கும்.

கலைகள் கற்கவும், கல்வி கற்கவும், பரோபகாரார்த்த மாகவும் ஒருவன் பூப்பிரதக்ஷிணம் செய்வதில் எனக்கு யாதொரு மூட ஆக்ஷேபணையுமில்லை. ஆனால் அவன் மாத்திரம் தனக்குள்ளே நிலைத்தவனாக இருக்கவேண்டும், — தன் அறிவைவிடப் பெரிய பொருள் ஏதாவது காண லாம் என்ற எண்ணத்தோடு அவன் செல்பவனாக இருக் கக்கூடாது. வேடிக்கை பார்க்கும் எண்ணத்தோடாவது, தன் உள்ளத்துள் இல்லாத வஸ்துவை அடைந்துவிட லாம் என்றாவது வெளியேறுகிறவன் தனது ஆத்மாவை விட்டுவிட்டு விலகுகிறான். வாலிபனாக இருந்தும் ஜீர் ணமான பொருள்களின் சம்பந்தத்தினால் விருத்தனாகி விடுகிறான். தேசத்திலும், பால்மீராவிலும் அவனுடைய அறிவும் உள்ளமும் கிழண்டு ஜீர்ணமாய்ப் போய்விடு கின்றன. அவன் கேவலம் ஒரு பாழினிடத்து இன்னொரு பாழைக் கொண்டுபோகிறவன்தானாகிறான்.

பிரயாணமானது மூடர்கள் உவக்கும் சுவர்க்கம். ஸ்தலபேதத்தில் ஒன்றுமே இல்லை என்று முதல் யாத்திரையே காட்டிவிடும். வீட்டிலிருக்கும்போது, நேபிலத்துக்கும் ரோமாபுரிக்கும் சென்றால் அழகு என்னும் கள்ளை உண்டு லகிரி ஏற்றிக்கொள்ளலாம் என்று கனவு கண்டுகொண்டு மனக்கவலையை ஒதுக்கிவிடுகிறேன். மூட்டை கட்டிக்கொண்டு, நண்பர்களை ஆலிங்கனம் செய்துவிட்டு, கப்பலேறி நேபிலத்துக்குப் போய் இறங்கிப் பார்க்கும்போது என்னுடைய மனக்கவலை எனக்கு முன்னாலேயே வந்து காத்துக்கொண்டிருக்கிறது. இந்தக் கஷ்டத்துக்கு என்ன செய்வது? வாத்திக்கானையும் அரண்மனைகளையும் போய்ப் பார்க்கையில், அங்குள்ள காக்ஷிகளையும் அவைகளைக் காண்பதால் உள்ளத்தில் எழும் பாவங்களையும் கண்டு ஆனந்தத் தேன் உண்பதாக நடிக்கிறேன். ஆனால் யதார்த்தத்தில் எனக்குள் லகிரி ஏறவில்லை. எங்கு போனாலும் என் நிழல் கூடவேதான் வருகிறது.

ட. இந்த யாத்திரைப் பைத்தியம் ஒரு தனியான வியாதியன்று: அது அறிவின் தொழில்களனைத்தையும் கெடுக்கும் ஒரு நோயின் சின்னமே. இயற்கையிலேயே சித்தம் ஒரு ஓடுகாலி; நாம் கல்வி கற்பிக்கும் தோரணையும் சித்தத்தின் சஞ்சலத்தன்மையை வளர்த்துவிடுகிறது. நாம் வெளியில் போகமுடியாதபோது நம் அறிவு சுழலுகிறது. ஒன்றைப் பார்த்து அனுகரிக்கிறோமே அது என்ன, மனதின் ஸ்திரமின்மை யல்லவா? நாம் வீடு கட்டுவது அன்னிய நாட்டாரைப் பார்த்துக் கட்டுகிறோம்; நம்முடைய அலமாரிகளில் அன்னியநாட்டு அலங்காரப்பொருள்களைத்

தான் நிரப்பிவைக்கிறோம்; நம்முடைய அபிப்பிராயங்கள், சுவை, அறிவு முதற்கொண்டு எல்லாம் சென்றகாலத்தை அல்லது தூரதேசத்தை ஆதாரமாகக் கொண்டு அவைகளின் பின் செல்லுகின்றன. கலைகள் செழித்தோங்கின நாடுகளிலெல்லாம் மனிதனுடைய உள்ளம்தான் கலைகளை உண்டாக்கிவைத்தது. தன் கலையால் சிருஷ்டிப்பதற்கு முன்னே கலைவல்லான் முதலில் வஸ்துவின் பிம்பத்தைத் தன் சித்தத்தினுள்ளே காண்கிறான். வஸ்துவைப்பற்றியும் அதைச் சிருஷ்டிக்கும் உபாயத்தைப்பற்றியும் அவன் செய்யும் சம்யமம் தான் அவனுடைய வித்தைக்குச் சாதனம். தோரியச் சிற்பத்தையாவது, கோத்தியக் கட்டடத்தையாவது நாம் ஏன் அனுகரிக்கவேண்டும்? * அழகு, சௌகர்யம், சித்தகாம்பீரியம், சமத்கார சிருஷ்டனை, எல்லாம் மற்றவர்களுக்கு எத்தனை சமீபத்திலிருந்தனவோ அத்தனை சமீபத்தில் நமக்கும் இருக்கின்றன. நம் நாட்டுச் சீதோஷ்ணநிலை, நிலப்பாங்கு, பகற்பொழுதின் நீளம், ஜனங்களுடைய சௌகரியம், ராஜாங்கத்தின் தன்மை, அதன் நடை, இதுகளையெல்லாம் நன்றாக யோசித்துக்கொண்டு, நாம் கட்டப்புகும் கட்டடம் இவைகளனைத்திற்கும் அனுகுணமாக அமைவதற்கு நாம் செய்யவேண்டியது என்ன என்று அமெரிக்கச் சிற்பி மாத்திரம் பயபக்தி விசுவாசத்துடன் தன் மனதில் சம்யமம்

---

* புராதன கிரேக்க ஜாதியில் ஒரு வகுப்பாருக்கு தோரியர் என்று பெயர். கோத்தியர் சுமார் ஆயிர வருஷங்களுக்குமுன் வடஐரோப்பாவிலிருந்து கிளம்பி ஐரோப்பாவின் மத்தியபாகம் முழுவதையும் ஆக்கிரமித்த ஜாதி.

செய்தானுனல், அவைகளுக்கு ஏற்ற வீடு கட்டுவான் என்பதில் சந்தேகமேயில்லை. அதுவுமன்றி, அப்போப் பட்ட வீடு கண்ணுக்கும் மனதுக்கும் ரம்மியமாகவும் இருக்கும்.

ஒருவரையும் பார்த்து அனுகரிக்காதே. உன் சுவயமான மனோதர்மத்தையே வெளிப்படுத்து.* உனக்குக் கடவுள் அருளியிருக்கும் சக்தியை, ஆயுள் முழுவதும் பயின்றுவருவதால் ஏற்படும் பரிபூரணமான சாமர்த்தியத்தோடு எந்த நிமிஷத்திலும் நீ காட்டலாம். இயல்பின்றி வேறொருவனிடமிருந்து மாத்திரம் கற்றுக்கொண்ட வித்தையில் நீ அரைவாயனுகத்தான் இருக்கமுடியும் — உனக்கு இஷ்டமானபோது அந்த வித்தையைக் காட்டுதல் கடினம். ஒவ்வொருவனுக்கும் அவனவன் பரிபூரணமாகச் செய்யக்கூடிய தொழிலை அவனை ஆக்கினவன்தான் கற்பித்துத்தரமுடியும். ஒரு மனிதன் எதில் நிபுணனுக இருக்கிறுன், அல்லது எதில் நிபுணனுக முடியும் என்று அவனே காட்டுகிறவரையில் அது உலகத்தில் யாருக்கும் தெரியாது. ஷேக்ஸ்பியரைத் தயார் செய்யக் கூடிய உபாத்தியாயன் எங்காவது இருக்கிறுனு? பிராங்க்ளின், வாஷிங்டன், பேகன், நியூட்டன், ஆகிய இவர்களுக்கு அறிவூட்டக்கூடிய உபாத்தியாயன் எங்காவது இருப்பானு? ஒவ்வொரு மகாபுருஷனும் தன்னந்தனியனே. ஸீப்பியோ தன்னுடைய மற்றெந்தக் குணத்தையும் வேறொருவனிடமிருந்து கற்றிருக்கலாம். ஆனல்

---

* ச்ரேயாந் ஸ்வத்ஹர்மோ விகுண:
பரத்ஹர்மாத் ஸ்வநுஷ்ட்ஹிதாத்,

தன் ஸீப்பியோத்தன்மையை மாத்திரம் எங்கிருந்தும் கடன்வாங்கியிருக்கமுடியாது. ஷேக்ஸ்பியரைப் படித்து ஷேக்ஸ்பியராக முடியாது. உனக்கு அளிக்கப்பட்டிருக்கிற வித்தையைப் பயில். அதில் உனக்கு எல்லாச் சித்திகளும் கிடைக்கும். அதில் நீ எத்தனை தைரியம் வேண்டுமென்றாலும் காட்டலாம். பீதியனுடைய கம்பீரமான சிற்றுளியையோ, மிஸரநாட்டாரின் மணியாசிக் கரண்டியையோ, மோஸெஸ், தாந்தே, இவர்களின் இறகையோ நிகர்த்த, ஆனால் இவை அனைத்தினும் வேறான, ஒரு மகா வாக்கு உன்னிடம் இந்த க்ஷணத்தில் இருக்கிறது. சமஸ்த விபூதிகளும் நிறைந்ததாய் பிரசண்டமான வாக்கையுடையதாய், ஆயிரம் நாவையுடையதாய், இருக்கும் ஆத்மாவானது ஒரு தடவை செய்த விதமே மறுபடியும் செய்ய அனேகமாய்த் திருவுளம் பற்றுவதில்லை. ஆனால் இந்த உலக பிதாக்களுடைய வாக்கை நீ நன்றாகக் கேட்டுக்கொள்வாயானால் அதே சுவரத்தில் அவர்களுக்கு எதிர்மொழி* யளிப்பாய். ஏனெனில் காதும் நாவும் ஒரே தன்மையுள்ள இந்திரியங்கள். உன்னுடைய சுபாவ சக்தியிலேயே நிலையாக நின்று உன்னுடைய உள்ளம் கூறும் வண்ணமே நீ செய்துவருவாயானால், சென்றுபோன யுகங்களை நீ மறுபடியும் சிருஷ்டித்துவிடுவாய்.

ச. நமது மததர்மமும், கல்வியும், கலைகளும் வேற்றார்களையே நோக்கியிருப்பதுபோலவே நமது ஜன சமூக ஏற்பாடுகளும் அன்னிய தேசங்களைத்தான் மாதிரியாகக் கொண்டிருக்கின்றன. ஜன சமூகம் முன்னைவிட

---

* ஜவாப்பு.

மேம்பாடடைந்திருக்கிறது என்று மனிதர் தங்களைத்தாங்களே வியந்துகொள்ளுகிறார்கள்; ஆனால் ஒரு மனிதனாவது உயர்ந்துபோயிருப்பதாகத் தெரியவில்லை.

ஜன சமூகத்தில் விருத்தி என்பது இல்லை. ஒரு பக்கம் முன் சென்றால் இன்னொரு பக்கம் அதே காலத்தில் பின் செல்லுகிறது. அதில் இடைவிடாத மாறுதல்கள் ஏற்படுகின்றன. அது அநாகரீக தசையிலிருந்து நாகரீகத்தை அடைகிறது, கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக்கொள்ளுகிறது, செல்வத்தைச் சேர்த்துவைக்கிறது, பூத சாஸ்திரங்களை உண்டாக்குகின்றது. ஆனால் இந்த மாறுதல்களினால் ஜனங்களுக்குக் குண விருத்தி ஏற்படவில்லை. ஒரு நன்மை கிடைப்பதற்கு இன்னொரு நன்மையை விடவேண்டியிருக்கிறது. ஜன சமூகம் புதிய கலைகளைச் சிருஷ்டிக்கிறது, அதற்கு விலையாகப் பழைய இயற்கையுணர்வுகளைத் தத்தம் செய்துவிடுகிறது. நல்ல உடைதரித்து, கையில் பெனிசலும், சட்டைப் பையில் கடியாரமும் உண்டியலும் வைத்துக்கொண்டு, எழுதவும் படிக்கவும் சிந்திக்கவும் கற்றிருக்கிற அமெரிக்கன் எங்கே, கதையும், ஈட்டியும், பாயும், தூங்குவதற்கு ஒரு குடிசையில் இருபதில் ஒரு பாகமும் ஆகிய இவைகளையே தன் ஆஸ்தியாகக் கொண்டிருக்கிற வஸ்திரந் தரியாத நியூஜீலந்துத் தீவான் எங்கே! ஆனால் அவர்களுடைய சரீர நிலைமையைப் பார்த்தால் வெள்ளை மனிதனுக்குப் பழைய நாளைய வன்மை போய்விட்டது என்று தெரியவரும். சில பிரயாணிகள் சொல்லுவது வாஸ்தவமானால், வனவாசிகளைப் பெரிய கோடரியால் வெட்டின இரண்டு நாளைக்

கெல்லாம் அவர்களுடைய சதை, தாரை வெட்டினால் அது மறுபடியும் சேர்ந்துகொண்டுவிடுவதுபோல, ஒன்று சேர்ந்துகொண்டு சுவஸ்தமாகிவிடுகிறதாம். ஆனால் அதே காயம் வெள்ளை மனிதனைக் கொன்றுவிடும்.

நாகரீக மனிதன் நாலு சக்கர வண்டி செய்திருக்கிறான், ஆனால் காலின் வலியை இழந்துவிட்டான்; பிரம்பு பிடித்து நடக்கிறான், ஆனால் அவன் தசையின் வன்மை போய்விட்டது; நல்ல ஜெனேவா கடியாரம் வைத்திருக்கிறான், ஆனால் சூரியனைப் பார்த்து நேரத்தைச் சொல்லும் சக்தி போய்விட்டது. அவனிடம் கிரென்னிஜ் பஞ்சாங்கம் இருக்கிறது. வேண்டும்போது அதில் பார்த்துக்கொள்ளலாம் என்கிற தைரியத்தினால் அவன் வானத்தின் நக்ஷத்திரங்களைக் கவனிப்பதில்லை. மேஷாயன துலாயனங்களும் அதே கதிதான். ஜோதிமயமான நக்ஷத்திர மண்டலத்தின் கதி அவனுக்கு லவலேசமும் தெரியாது. குறிப்பு எழுதி வைத்துக்கொள்ளுவதில் ஞாபக சக்தி போய்விடுகிறது; புஸ்தகசாலைகள் அறிவை அமுத்திவிடுகின்றன; பிராண அபாய நிதிகள் (இன்ஷூரன்ஸ் கம்பெனிகள்) வளர வளர அபாயங்கள் அதிகரிக்கின்றன; யந்திரங்களினால் தொந்திரவு ஏற்படவில்லையா; நாகரிக விருத்தியினால் வீரியம் போய்விடவில்லையா; சடங்குகளாலும் கட்டுப்பாடுகளாலும் கட்டப்பட்டிருக்கிற கிறிஸ்தவ மார்க்கமானது பிராகிருத தர்மத்தின் வேகத்தைக் குறைத்துவிடவில்லையா; என்பவை பெருங் கேள்விகளாக இருக்கின்றன. ஏனெனில், ஒவ்வொரு

ஸ்தோயிகனும் ஸ்தோயிகனே, * ஆனால் கிறிஸ்தவ லோகத்தில் கிறிஸ்தவன் எங்கே இருக்கிறான் ?

மனிதனுடைய உயரத்திலும் கனதியிலும் எப்படி மாறுபாடில்லையோ அதுபோலத் தார்மீக அளவையிலும் மாறுபாடில்லை. முன்னிருந்த மனிதரைவிட உயர்ந்த மனிதரைக் காணேம். முற்காலத்து மகா புருஷருக்கும் தற்காலத்து மகா புருஷருக்கும், ஆச்சரியம், சாயல் ஒன்றேயாகத்தான் இருக்கிறது. பத்தொன்பதாவது நூற்றாண்டின் பௌதிக சாஸ்திரங்கள், கலைகள், தர்மாதி, தத்துவஞானம் ஆகிய இவைகளெல்லாம் சேர்ந்தும், உங, உச நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த புளூதார்க்கின் வீரர்களை விடப் பெரிய வீரர்களை உண்டாக்க முடியவில்லை. காலம் மாறியும் ஜாதி உயரத்தில் வளரவில்லை. போகியோன், ஸொக்ராத்தன், அனக்ஸகோரன், தியோகெனன் முதலியோர் பெரிய மகான்கள். ஆனால் அவர்களுக்குப் பின் அவர்களுடைய ஜாதி என்னத் தக்கவர் ஒருவருமில்லை. யதார்த்தத்தில் அவர்களுடைய ஜாதியான் யார் என்றால், அவர்களுடைய கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அனுகரிக்காமல், தனக்குத் தானே குருவாக இருந்து கொண்டு தான் ஒரு சமயத்தை ஸ்தாபிக்கிறவன் தான். ஒவ்வொரு காலத்தின் கலைகளும் நூதன யந்திரங்களும் அந்தக் காலத்திற்குக் கேவலம் உடைமாத்திரம் ஆகின்றனவே யல்லது மனிதர்களின் சக்தியை வளர்க்கிறதில்லை. திருத்திச் செய்யப்பட்ட யந்திரத்தினின்று வரும் தீமைக்கும் அது கொடுக்கும் பலனுக்கும் கணக்கு சரியாகப்

---

* ருஅ-ம் பக்கம் பார்க்க.

போய்விடலாம். மீன் பிடிக்கும் படகுகளில் ஹட்ஸனும் பேரிங்கும் செய்த வேலைகளைக் கண்டு, பௌதிக சாஸ்திரமும் கலைகளும் தேடிக்கொடுத்த சாதனங்களைப் பெற்ற பாரியும் பிராங்க்ளினும் படும் ஆச்சரியத்திற்கு அளவில்லை. தற்காலம் நாடகம் பார்க்கத்தான் உபயோகப்படுகிற தூர திருஷ்டிக் கண்ணாடியை வைத்துக்கொண்டு கலீலெயோ வானத்தில் கண்டுபிடித்த அற்புதங்களைப் போன்ற அற்புதங்கள் இன்னும் ஒருவனும் கண்டுபிடிக்கவில்லை. தட்டில்லாத படகிலே சென்று கொலம்பன் புதிய உலகத்தைக் கண்டுபிடித்தான்.* சில வருஷங்களுக்கு அல்லது சில நூற்றாண்டுகளுக்கு முன் மகா படாடோபத்துடன் ஏற்படுத்தப்பட்ட யந்திரங்களையும் சாதனங்களையும் மனிதர் அப்போதைக்கப்போது தள்ளிவிடுவதைப் பார்க்கும்போது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. மகா புருஷன் வெளியிலுள்ள கோசங்களை யெல்லாம் விலக்கித் தள்ளிவிட்டு யதார்த்த மனிதனைத்தான் பிடிக்கிறான். யுத்தங்கள் நடத்தும் தோரணையில் ஏற்பட்ட விருத்தியம்சங்களைச் சாஸ்திரத்தின் வெற்றிகளாக மதித்திருந்தோம். ஆனால் கூடாரமின்றி வெறுந் தரையில் சைனியத்தை நிறுத்தியே நப்போலியன் ஐரோப்பாவை ஜயித்தான். உபாதானங்களையெல்லாம் கழற்றி எறிந்துவிட்டு, கேவலம் சிப்பாயின் ஆற்றலையே ஆயுதமாகக் கொண்டு அவன் சைனியத்தை நடத்தினான். "நம்முடைய ஆயுதங்கள், ஆகார தி பாண்டாரங்கள், போஷகத் துருப்புகள், வண்டிகள் முதலியவைகளைத் தூரப் போட்டுவிட்டு, ரோமர் செய்தது

---

* புதிய உலகம் — அமெரிக்கா.

போலப் படையாளிடம் தானியத்தைக் கொடுத்து, அதை அரைத்து மாவாக்கி அவனையே ரொட்டி செய்துகொள் ளும்படி நியமிக்கிறவரையில் சர்வ சிரேஷ்டமான படையை உண்டாக்குவது அசாத்தியம்,” என்று அவன் லாஸ் காஸஸ்ஸிடம் சொல்லியிருக்கிறான்.

ஜன சமூகம் ஒரு அலை போன்றது. அலை மேலும் மேலும் செல்லுகிறது, ஆனால் அதனுள்ளிருக்கும் ஜலம் அப்படிச் செல்வதில்லை. ஒரு தனித் திவலை அலையின் பள்ளத்திலிருந்து உச்சி வரையில் கூட ஏறுவதில்லை. அது ஒரு வஸ்து அன்று, வெறும் தோற்றமே. இன்றைக்கு ஒரு ஜாதி என்று சொல்லப்படும் மனிதர்கள் எல்லோரும் அடுத்த வருஷத்தில் இறந்துவிடுகிறார்கள். அவர்க ளுடைய அனுபவமும் அவர்களோடு போய்விடுகிறது.

அப்படியே செல்வத்தை நம்பிக்கொண்டிருத்தலும், அந்தச் செல்வத்தை ரக்ஷிக்கிற ராஜாங்கங்களை நம்பிக் கொண்டிருத்தலும் தன்னம்பிக்கைக் குறைவேயாம். ஆத் மாவை விட்டு அனாத்மாவைப் பார்ப்பதே நெடுநாளாக வழக்கமாகிவிட்டபடியால், மனிதர் செல்வம்தான் புரு ஷார்த்தமென்றும், தர்ம சமாஜங்களும், கல்வி சமாஜங்க ளும், ராஜரீக விதானங்களும் செல்வத்தின் மெய் காப்பா ளர்கள் என்றும், பாவிக்கப் புகுந்துவிட்டார்கள். ஆகை யால் இந்தச் சமாஜங்களையும் ஏற்பாடுகளையும் யாராவது தாக்கினால் அவர்கள் தங்களுடைய புருஷார்த்தங்களையே தாக்குவதாக எண்ணி, தாக்குவோர்களை நயந்தும் கடிந் தும் தடுக்கிறார்கள். ஒரு மனிதனுடைய ஆஸ்திதான் அவன் மதிப்புக்கு அளவுகோல், அவனுடைய தன்மை

அன்று என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அறிவாளி தனக்கு ஆஸ்தி இருந்தால் அது விஷயத்தில் லஜ்ஜைப்படுகிறான்—தன்னுடைய சொந்த சுபாவத்தின் பேரில் அவனுக்கு அத்தனை மதிப்பு. முக்கியமாய், அது பிதிரார்ஜ்ஜிதமாயாவது, தானத்தாலாவது, குற்றஞ்செய்தாவது அவனுக்குக் கிடைத்திருக்கும் பக்ஷத்தில் அவனுக்கு அது அருவருப்பை உண்டாக்குகிறது; அது தன் உடைமை அன்று, அது தன்னைச் சேர்ந்ததன்று, அதன் வேர் தன்னுள் இல்லை, ஒரு கள்ளனாவது, ராஜரீகப்புறழ்ச்சியாவது அதை அபகரித்துவிடாத ஒரு காரணம்பற்றித்தான் அது தன்னிடம் தங்கியிருக்கிறது, என்று அவன் நன்றாக உணருகிறான். மனிதனால் சுவயமாகத் தேடப்படுவது அவனுடைய அந்தக்கரண தத்துவங்கள் தாம்: அவைதாம் அவனுடைய யதார்த்தமான சொத்து; அவை அரசன், தெருக்கூட்டம், ராஜ்ஜியப்பிரளயம், நெருப்பு, புயற்காற்று, பெருங்கடன், இவைகளுள் எதனாலும் அபகரிக்க முடியாதவை; அவன் விடுகிற மூச்சுகள் ஒவ்வொன்றும் அவைகளைப் புதுப்பித்துவைக்கின்றன. கலீபா ஆலி, "உனக்கு விதிக்கப்பட்டிருக்கிற ஸ்தானம் உன்னைத் தேடிக்கொண்டேயிருக்கிறது; ஆகையால் நீ அதைத் தேடிக்கொண்டு பதறித் திரியாதே," என்று சொல்லுகிறான். இந்த அன்னியப் பொருள்களின் மீது நம்பிக்கை வைப்பதனால்தான் நமக்கு ஜனக்கூட்டத்தினிடத்து ஒரு பயம் பிறந்துவிடுகிறது. ராஜரீகப் பகுதியார் பலபல கூட்டங்களாகக் கூடுகிறார்கள். கூட்டம் அதிகரிக்க அதிகரிக்க, எஸ்ஸெக்ஸ் பிரதிநிதி

கள்! நியூ ஹாம்ப்ஷயர் ஜனக்கக்ஷியார்! மெயின் விக்குகள்!* என்றிப்பேர்ப்பட்ட அட்டகாசங்கள் ஏற ஏற, தேசாபிமானியானவன் தனக்கு ஒரு ஆயிரம் கண்களும் கைகளும் வளர்ந்துவிட்டதாக நினைத்துக்கொள்ளுகிறான். அதுபோலவே சீர்திருத்தக் கக்ஷியாரும் கூட்டங்கள் கூட்டி, சீட்டுப்போட்டுத் தீர்மானங்கள் செய்கிறார்கள். நண்பர்களே, கடவுளை உங்கள் அகத்துள் புகுந்து வசிக்கச் செய்யும் மார்க்கம் இது அன்று, இதற்கு நேர் எதிரிடையானதாகும்! தனக்கு அன்னியமான ஆதாரங்கள் அனைத்தையும் ஒதுக்கிவிட்டுத் தன்னந்தனியனாக மனிதன் நிற்கும்போதுதான் இவன் பலவான், இவன் வெல்வான் என்று என் மனதில் தோன்றுகிறது. அவன் கக்ஷியில் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு ஆளும் அவனுடைய வலிமையைக் குறைக்கவே குறைக்கிறான். ஒரு நகரத்தை விட ஒரு மனிதன் வலியனில்லையா? வேற்று மனிதரிடமிருந்து ஒன்றும் வேண்டாதே; அப்படி நீ வேண்டாதிருந்தால், எல்லையில்லாத சுழற்சியின் மத்தியில் உன்னைச் சுற்றியிருக்கும் சகலத்துக்கும் நீயேதான் ஆதாரம்போலக் கம்பீரமாய் விளங்குவாய். சக்திக்கு இருக்கை உள்ளமே என்றும், தன்னைவிட்டு வேற்றிடத்தில் சுகத்தையும் நலத்தையும் தேடுவதால்தான் தனக்கு வீரியமில்லாமல் போய்விடுகிறது என்றும் ஒருவன் கண்டுபிடித்து, தன் அறிவையே முற்றிலும் நம்பிவிடுவானானால், அவனுடைய

* ஜனக் கக்ஷியாருக்குள் 'விக்கு' என்றும் 'ராடிக்கால்' என்றும் இரண்டு பகுதிகள் ஆங்கில அமெரிக்கா நாடுகளில் இருந்தன. ராடிக்கால் கக்ஷி விரும்பும் அத்தனை சுதந்தரங்கள் கூடாது என்று சொல்லுவார்கள் விக்குகள்.

கோணலெல்லாம் நேராகிவிடுகிறது; நிமிர்ந்து நிற்கிறான்; தன் கை கால்களைச் சுவாதீனப்படுத்திக்கொள்ளுகிறான்; அற்புதங்கள் புரிவான். தலைகீழாக நிற்கிறவனைவிட, காலின்மேல் நேராக நிற்பவன் உறுதியாக நிற்பானல்லவா!

ஆகையால் செல்வம் என்று சொல்லப்படும் பொருளை நன்றாகப் பிரயோஜனப்படுத்து. பெரும்பாலர் அதன் சக்கரம் உருள உருள, சூதாடுபவர்போல ஒரு தடவை சகலத்தையும் ஜெயிக்கிறார்கள், மற்றொரு தடவை சகலத்தையும் இழந்துவிடுகிறார்கள். இந்த மாதிரி லாபங்களை அதார்மீகமானவை என்று தள்ளிவிட்டு, கடவுளினுடைய பொக்கிஷதார்களான காரணம், காரியம் என்பவைகளோடு நெருங்கிப்பழகு. மனதினுள்ளே உழைத்து மனதினுள்ளே பொருள் சேர்ப்பாயானால், அதிர்ஷ்டத்தை வென்றுவிடுவாய், அது மாறிவிடுமோ என்னும் பயம் உன்னை அணுகாது. ராஜரீக காரியங்களில் வரும் வெற்றி, வாடகைகளின் ஏற்றம், உன் நோயுற்ற நண்பனுடைய சுவஸ்தம், வேற்றாருக்குப் போன சிநேகிதனுடைய வரவு, அல்லது இவைபோன்ற வேறு சுபகரமான சம்பவங்கள் நேரும்போது உனக்கு உற்சாகம் உண்டாகிறது: நல்ல காலம் வந்துகொண்டிருக்கிறது என்று நினைக்கிறாய். அவ்விதம் நம்பாதே. உன் உள்ளத்தைத் தவிர வேறொன்றும் உனக்குச் சாந்தியைக் கொடுக்காது. தர்மஜயம் ஒன்று தான் உனக்குச் சாந்தியைத் தரும்.

எமர்ஸன் எழுதிய "தன்னம்பிக்கை"

முற்றுப்பெற்றது.

# சிறப்புப்பெயர் அகராதி

சங்கேதங்கள்:— கி. பி. என்றால் கிறிஸ்து பிறந்தபின். கி. மு. என்றால் கிறிஸ்து பிறக்குமுன். ஒரு ஆளின் பெயருக்குப் பின் இரண்டு வருஷங்கள் வந்தால், முதலாவதை அவன் பிறந்த வருஷமாகவும், பிந்தியதை அவன் இறந்த வருஷமாகவும், கொள்ளவேண்டியது. ஒரே வருஷம் குறித்திருந்தால் அது அவனுடைய ஜீவிய காலத்தின் மத்தியமாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது என்று கொள்ளவேண்டும். அரசர்களின் பெயருக்குப் பின் வரும் வருஷங்கள் ஆட்சி வருஷங்கள்.

அந்தோணி: கி. பி. ௨௫௧-௩௫௬. ஓர் ஐரோப்பியத் துறவி.

அமேரிக்கா: ஐரோப்பாவின் மேற்கே கடலில் எட்டு நாள் பிரயாணத்துக்கு அப்பாலுள்ள கண்டம். அதன் முக்கியபாகமான ஐக்கிய நாடுகளுக்கு இதைச் சிறப்புப்பெயராக உபயோகிக்கிறது வழக்கமாக இருக்கிறது.

அனக்ஸகோரன்: கி. மு. ௪௪0. அதேனியக் கிரேக்கன். மகா வாக்மியும் ராஜதந்திரியுமான பெரிக்ளனுக்கும், கவியான யூரிபெதனுக்கும் நண்பன். சித்துத் தான் ஆதிப்பொருள் என்ற கொள்கையுள்ள தத்துவ சாஸ்திரி.

ஆதாம்ஸ்: கி. பி. ௧௭௯௭-இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஜனத் தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டவன்.

ஆலி: முஹம்மது நபியின் மகளான பாதிமாவின் புருஷன். கி. பி. சுருசு-இல் கலீபா ஆகி சுசுக-இல் கொல்லப்பட்டான். மகாத்துமா.

ஆல்ப்ரெட்: கி. பி. அசகூ-கூOO. இங்கிலாந்தில் ஆண்ட அரசன்; தேசாபிமானி, கல்விமான், நீதிமான்.

இத்தாலியா: ஐரோப்பாக் கண்டத்தின் தெற்கில் நடு மத்தியிலுள்ள தீபகற்பம். ஐரோப்பாவிலும் மேற்கு ஆஸியாவிலும் சுOO வருஷங்கள் ஏகாதிபத்தியம் செலுத்திய ரோமாபுரி இதனுள் ஓர் நகரம். இந்நாடு கவிதைக்கும் கலைகளுக்கும் பேர்போனது.

இயேசு: கிறிஸ்து என்னும் பெயரின் கீழ் பார்க்க.

எரேமியா: கி. மு. சுOO. யூத தீர்க்கதரிசி.

எஸ்ஸேக்ஸ்: வட அமெரிக்காவில், கானடா நாட்டிலுள்ள ஓர் ஜில்லா. இங்கிலாந்திலும் இப் பெயருள்ள ஓர் ஜில்லா உண்டு.

கலீலேயோ: கி. பி. கருகூச-ககூசஉ. இத்தாலியாவில் வாழ்ந்த ஒரு பெரிய வானசாஸ்திரி. பூமி சூரியனைச் சுற்றுகிறது என்று சொல்லியதற்காகப் போப்பினால் இவன் சிறையில் வைக்கப்பட்டான். ஸ்ரீ நாராயண சாஸ்திரியின் கணக்குப்படி உசOO வருஷங்களுக்கு முன் இருந்த ஆரிய பட்டன் என்னும் நம் நாட்டு வானசாஸ்திரி இந்த உண்மையை முதன் முதல் ஸ்தாபித்தான்.

கலீபா: முஹம்மதிய தர்மத்தின் அத்தியக்ஷன். இன்றைக்குத் துருக்கி சுல்தான்தான் கலீபா.

**கால்வின்:** கி. பி. கரு௦கூ-கருகூச பிராடெஸ்டாண்டுக் கொள்கைகளில் ஒன்றை ஸ்தாபித்த ஸ்வித்ஸர்லாந்து நாட்டு மகான். அவன் கொள்கைக்குக் **கால்வினிஸம்** என்று பெயர்.

**கிரேன்னிஜ்:** இந்த ஊரை ஆங்கிலேயர் வான சாஸ்திரக் கணக்குக்காக அயன மத்தியஸ்தானமாக வைத்திருக்கிறார்கள்.

**கிரேஸ்:** ஐரோப்பாவின் தெற்கில் கிழக்குக்கோடியிலுள்ள தீபகற்பம். ஐரோப்பிய நாகரீகத்திற்கு இது தான் தாய்நாடு.

**கிளார்க்ஸன்:** கஎகூ௦ - கஅசகூ. இங்கிலாந்தில் நிகிரோவர்களை அடிமையாக்கக் கூடாது என்று போராடின மகான்.

**கிறிஸ்து:** இயேசு என்னும் ஒரு பெரிய யூதயோகி வைத்துக்கொண்ட பட்டம். கிறிஸ்து என்றால் பூரணமடைந்தவன் என்று பொருளாம். தன் சுதேசிகள் ஞானத்தையும் பக்தியையும் கைவிட்டுக் கர்மடர்களாக இருப்பதைக் கண்டு இயேசு அவர்களைக் கண்டித்து, சகல ஜனங்களுக்கும் பக்தியும் ஜீவதயையும் போதித்தான். அதற்காக யூதப் பிரமுகர் வெகுண்டு அவனைச் சிலுவையில் அறைவித்தார்கள். ஆனால் உலகத்தில் ஒரு பெரும் பாகத்தார் அவனை ஈசுவராவதாரமாகக் கொண்டிருக்கிறார்கள். அவன் பிறந்த தேதியே கிறிஸ்தவ சகாப்தத்தின் முதல் வருஷம். இறக்கும்போது அவனுக்கு ௩௩ வயது.

குஸ்தாவ அதோல்பன்: ஐரோப்பாவின் வட மேற்குக் கோடியிலுள்ள ஸ்வேத நாட்டு அரசன். பெரிய போர்வீரன். கி. பி. கசாஙஉ - இல் போரில் இறந்தான்.

கோலம்பன்: கசாஙசு-கருOசு. உலகம் கோளவடிவமாயிருப்பதால் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு மேற்குச் சமுத்திரத்தில் கப்பல் செலுத்திச் செல்லலாம் என்று தீர்மானித்துச் சென்று அமெரிக்காவைக் கண்டு பிடித்த தீரன். ஜினோவா நகரத்தில் பிறந்த இத்தாலியன்.

கோப்பர்னிக்கன்: கி. பி. கசஎங - கருசஉ. பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்று ஐரோப்பாவில் முதல்முதல் ருஜூப்படுத்திக் காட்டிய ஜோதிஷ நிபுணன். தோர்னில் பிறந்த போலந்து நாட்டுச் சன்னியாசி.

சாதம்: கி. பி. கஎOஅ - கஎஎஅ. இங்கிலாந்தில் மகா வாக்மி, பெரிய ராஜதந்திரி.

தாந்தே: கி. பி. கஉசுரு - கஙஉக. இத்தாலிய மகா கவி. பிளாரென்ஸூ நகரத்தான். இவனுடைய பிரதான காவியத்தின் பெயர் தேவ நாடகம்.

தாவீது: கி. மு. கOருO. யூதர்களின் புராதன அரசர்களில் ஒருவன். பெரிய பக்தன். இவன் பாடிய கீதங்கள் கிறிஸ்தவ வேதத்துள் ஒரு பாகமாக வைக்கப்பட்டிருக்கின்றன.

தியோகேனன்: கி. மு. சகங - ஙஉரு. கிரேஸில் ஒரு தர்ம தத்துவஞானி. இவன் கொள்கையினருக்கு ஸினிகர் என்று பெயர்.

தேபம்: மிஸரத்தின் புராதன ராஜதானிகளில் ஒன்று.

தோரன்: ஸாக்ஸோனிய, ஜெர்மானிய புராணங் களில் பேசப்படும் ஓர் வீரத் தெய்வம்.

நப்போலியன் கி. பி. ௧௭௬௯ - ௧௮௨௧. பிரான் ஸில் பெயர் பெற்ற சக்ரவர்த்தி. உலகத்துச் சேனாநாய கர்களுள் அக்கிரகண்ணியன். கடைசிக்காலத்தில் ஆங்கி லரால் சிறையில் வைக்கப்பட்டான்.

நியூட்டன்: கி. பி. ௧௬௪௨ - ௧௭௨௭. ஆங்கிலேய கணிதசாஸ்திரி. சூரியன் நக்ஷத்திரங்கள் முதல் பரமா ணுக்கள் பரியந்தம் சகல ஜடப்பொருள்களும் ஒன்றை யொன்று சாசுவதமாய் இடைவிடாமல் ஆகரு ஷித்துக்கொண்டே இருக்கின்றன என்கிற பிரகிருதி தத்துவத்தையும் இன்னும் எத்தனையோ உண்மைகளையும் கண்டுபிடித்தவன்.

நியூ யார்க்கு: அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஓர் மாகா ணம்; அதன் தலைநகர்.

நியூ ஜீலந்து: ஆஸியாவின் கிழக்கேயுள்ள பஸிபிக் சமுத்திரத்திலுள்ள ஒரு தீவுக் கூட்டம். இது ஆங்கிலே யரின் குடியேற்று நாடுகளில் ஒன்று.

நியூ ஹாம்ப்ஷயர்: அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒரு மாகாணம்.

நேபிலம்: இத்தாலியாவில் ஓர் நகரம்; நேபிலத் தைப் பார்த்துவிட்டு உயிர் விடு என்பது மேல் நாட்டுப் பழமொழி. இந் நகரம் கடலோரத்தில் அர்த்த சந்திரன் போல வளைந்திருக்கும் ஒரு சிறு அழகிய குடாவின் கரையில் அதி ஒய்யாரமாக வீற்றிருக்கிறது.

பாக்ஸ்: கி. பி. கசூஉச-கசூகூக. கிறிஸ்தவ சமயத்துள் அஹிம்ஸையைப் பிரதான தர்மமாகக்கொண்ட உட்சமயத்தை ஸ்தாபித்தவன். இவன் கொள்கையினருக்குக் குவேக்கர் என்று பெயர்.

பாரி: கி. பி. கஎகூ0-கஅருரு. இவனுடைய முழுப் பெயர் ஸர் வில்லியம் எட்வார்ட் பாரி. அட்லாண்டிக் சமுத்திரத்தினின்று பஸிபிக் சமுத்திரத்துக்கு அமெரிக்காவின் வடகடல் மார்க்கமாக வழி இருக்கிறதா என்று சோதிக்க, மலைகள் போன்ற பனிக்கட்டிகள் நிரம்பியிருக்கும் பயங்கரமான அவ் வட கடலில் மூன்று தடவை கப்பல் செலுத்திச் சென்று பார்த்த தீரன்.

பால்மீரா: மேற்கு ஆஸியாவில் ஸாலமனால் கட்டப்பட்ட ஓர் நகரம். இதற்கு அவன் வைத்த பெயர் தாடமோர். தாடமோர் என்றால் பனைமரப் பட்டணம் என்று பொருள். தாடம் என்பது தாலம் என்கிற சம்ஸ்கிருத வார்த்தையின் ஆபாசம். கிறிஸ்து பிறக்க க000 வருஷங்களுக்கு முன்னே நமது நாட்டாருக்கும் எகிப்து, மேற்கு ஆஸியா முதலிய நாடுகளின் ஜனங்களுக்கும் வியாபார சம்சர்க்கங்கள் அபரிமிதமாக இருந்தன என்பதற்கு இந்தச் சம்ஸ்கிருதசம்பந்தமும் ஓர் அத்தாக்ஷியாகும்.

பித்தாகோரன்: கி. மு. ருசூகூ-சஎ0. ஒரு கிரேக்க மகாத்மா. கீழ்த் தேசங்களிலெல்லாம் பிரயாணம் செய்தவன். ஜன்மாந்தர வாதத்தை ஒப்புக்கொள்ளுகிறான். துறவை அதிகமாகக் கொண்டாடுகிறான்.

பிராங்க்ளின்: வடதுருவத்தைக் கண்டுபிடிப்பேன் என்று சங்கற்பித்துக்கொண்டு கப்பலில் சென்ற தீரன்.

கி. பி. கஅசஎ-இல் இறந்தான். எ௬-ம் பக்கத்தில் பேசப் பட்டவன் இவன் தான்.

பிராங்க்ளின்: கி. பி. கஎ0சு - கஎகூ0. இவன் முழுப்பெயர் பெஞ்ஜமின் பிராங்க்ளின். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சுதந்தரத்தை ஸ்தாபித்த தீரர்களுள் ஒருவன். மின்சார சக்திக்கும் மின்னலுக்கும் உள்ள சம்பந்தத்தை முதல் முதல் பரிக்ஷித்துக் காட்டினவன். சுஅ-ம் பக்கத்தில் பேசப்பட்டவன் இவன் தான்.

பிராட்டேஸ்டாண்டு: லூதர் என்னும்பெயரின் கீழ் பார்க்க.

பிராமீது: மிஸரம் என்பதன் கீழ் பார்க்க.

பிளாத்தன்: கி. மு. சஉ0-௩சகூ. கிரேஸிலுள்ள அதேனநகரத்துத் தத்துவசாஸ்திரி. அவனுடைய நூல்கள் தாம் தற்கால ஐரோப்பிய சாஸ்திரங்களனைத்துக்கும் தலை பருவி. அவனுடைய அறிவு நுட்பத்தையும், அறிவு விசாலத்தையும், தர்ம பக்தியையும் பார்த்தால் அவனை ரிஷி என்றே சொல்லவேண்டும். அவன் மிஸரம், பாபிலோனியா முதலிய நாடுகளில் நெடுங் காலம் பிரயாணம் செய்திருக்கிறான். அவனுடைய சித்தாந்தத்தின் அனேக அமிசங்கள் நமது நாட்டுச் சித்தாந்தங்களிற் சிலவற்றை ஒத்திருக்கின்றன. மனித சரீரத்தின் பிரதான நரம்பை, நம் பெரியோர்கள் கூறியுள்ள பிரகாரம், மேலே வேரும் கீழே கிளைகளும் உடைய விருக்ஷம் * என்றே அவனும் சொல்லுவதானது அத்தியாச் சரியமான ஒற்றுமையாக இருக்கிறது. எண்பது வயதில் ஒரு நூல் எழுதிக்கொண்டிருக்கும்போது அவன் பிராணன் போயிற்றும். ஸிஸெ

* ஊர்த்ஹ்வ மூலம் அத்ஹ: சாக:

ரோ என்னும் ரோம வாக்மி அவனுடைய நடையைப் பற்றி, "தேவராஜா கிரேக்கில் பேசுவானானால் இவன் பேசுவதுபோலத்தான் பேசுவான்," என்று சொல்லுகிறான்.

பிளேச்சர்: கி. பி. ௧௬00. ஆங்கில நாடகக் கவி.

பீதியன்: கி. மு. ௪௯௯ - ௪௩௧. அதேனா நகரத்துச் சிற்பி. சிற்பத்தொழிலில் இவனுக்கு மிஞ்சினவனில்லை. இவன் வெட்டிய சிலைகள் இன்னும் ஐரோப்பியக் கண்காட்சிச் சாலைகளில் ஆங்காங்கே இருக்கின்றன.

புளூதார்க்கு: கி. பி. ௫0 - ௧௨0. ஓர் கிரேக்க ஞானி. வீரர் சரித்திரங்கள் என்ற நூல் எழுதினவன்.

பூரியே: கி. பி. ௧௭௬௮ - ௧௮௩0. பூத சாஸ்திரமும் கணித சாஸ்திரமும் வல்ல ஓர் பிரெஞ்சுச் சாஸ்திரி.

பெந்தாம்: கி. பி. ௧௭௪௮ - ௧௮௩௨. ஓர் ஆங்கில அர்த்த சாஸ்திரி.

பேகன்: கி. பி. ௧௫௬௧ - ௧௬௨௬. ஆங்கில சாஸ்திரக்ஞன். மகா மேதாவி.

பேரிங்: மிதக்கும் மலைகள் என்று சொல்லத்தக்க பனிக்கட்டிகளால் பயங்கரமான ஆசியா கண்டத்தின் வட சமுத்திரத்தில் கி. பி. ௧௭௨௯ - இல் கப்பல் செலுத்திச் சென்று, ஆசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலுள்ள ஜலசந்தியைக் கண்டுபிடித்த தீரன். தென்மார்க்கு நாட்டான். அந்த ஜலசந்திக்கு இவன் பெயர்தான் வைக்கப்பட்டிருக்கிறது.

போகியோன்: கி. மு. ௪0௨ - ௩௧௭. ஒரு அதேனிய தேசாபிமானி; தீரன்.

போமண்ட்: கி. பி. ௧௬00. ஆங்கிலநாடகக் கவி.

போஸ்டன்: அமெரிக்க ஐக்கியநாட்டில் ஓர் நகரம்.

பௌல்: கி. பி. ௫0. கிறிஸ்து மதாசாரியர்களுள் பிரமுகன். இவனுடைய முயற்சிகளால்தான் கிறிஸ்துவின் மதம் அக் காலத்தில் பிராபல்லியத்தை அடைந்தது.

மில்டன்: கி. பி. க௬0அ-எச. ஆங்கில மகா கவி. சுவர்க்க நஷ்டம் என்ற மகா காவியம் எழுதியிருக்கிறான். உலகத்தில் அரசர் உதவாது, ஜன நாயக ஆட்சிதான் வேண்டும் என்ற கொள்கையினன். மகா தீரன்.

மிஸரம்: தற்காலத்தில் எகிப்து என்று வழங்கும் நாடு. ஆதிகாலத்தில் பௌதிக சாஸ்திரங்களுக்கும், மந்திர தந்திரங்களுக்கும் கல்விக்கும் பேர்போனது. ச000 வருஷங்களுக்கு முன் அங்கே ஆண்ட பாரவ அரசர்கள் கட்டிய, பிராமீது என்று சொல்லப்படுகிற, அத்தியாச்சரியமான கல்லறைகள் அங்கே இன்னும் இருக்கின்றன. அவைகளுள் சில ச00 அடி உயரமும் க0, கரு ஏகரா விஸ்தீரணமும் உள்ளன. ஆதிகாலத்தில் பல ஜாதிகள் இங்கே கலந்துவிட்டிருந்ததால் இதற்கு மிஸரம் என்ற பெயர் உண்டாயிற்று.

மேயின்: அமெரிக்க ஐக்கியநாட்டில் ஒரு மாகாணம்.

மோஸேஸ்: யூத ஜாதியின் ஆதி ஸ்மிருதிகர்த்தா. கிறிஸ்தவர் வேதத்தின் தலையிலுள்ள ரு புத்தகங்கள் அவனால் எழுதப்பட்டன என்று ஐதிகம். முகம்மதியரும் அவனை ஒரு தீர்க்கதரிசியாகக் கொள்ளுகிறார்கள். இவன் பெயரை அவர்கள் எழுதும் ரீதி மூஸா.

யூதர்: உலகத்துக்குப் பைபிள், தல்முது என்று வழங்குகிற வேதத்தையும் புராணத்தையும் கொடுத்த ஜாதி

யார். இயேசு என்னும் பெயரின் கீழும் பார்க்க. ரோமர்கள் இவர்கள் தலைநகராகிய எருஸலேமைப் பிடித்துச் சூறையாடின பிறகு இவர்கள் சுவதேசத்தை விட்டுவிட்டு மற்ற நாடுகளில் போய்க் குடியேறிவிட்டார்கள். ஒவ்வொரு நாட்டிலும் யூதர்கள் அகப்படுவார்கள். மிகச்செட்டாக இருந்து கடன்கொடுத்து வட்டிவாங்கி ஜீவித்துவருவதை முக்கியத் தொழிலாகக் கொண்டவர்களாதலால் இவர்களைப் பிற ஜாதியார் வெறுக்கிறார்கள். இந்த யுத்தத்துக்குப் பிறகு எருஸலேமைத் தலைநகராக வைத்து ஒரு யூத ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப் போவதாகப் பேச்சு நடந்து வருகிறது. ராத்ஸ்சைல்டு, மாண்டெகு, ஸஸ்ஸூன் ஆகிய கோடீசுவரர்களும், ஸ்பினோஸா, ஹைனெ ஆகிய தத்துவ சாஸ்திரிகளும், டிஸ்ரேயெலி என்கிற ராஜதந்திரியும் யூதர்.

யூதாஸ்: இயேசுவின் பன்னிரண்டு சிஷியர்களுள் ஒருவன். இவன் தன் குருவின் சத்துருக்களிடம் முப்பது வெள்ளிக் காசுகள் வாங்கிக்கொண்டு அவனைக் காட்டிக்கொடுத்த பாதகன். கடைசியாகத் தூக்கிட்டுக்கொண்டு இறந்தான்.

யோசேப்பு: கி. மு. கஎ00. யூத மகாத்மா.

லவ்வாஸியே: கி. பி. கஎசரு - கூச. பிரெஞ்சு இயற்கைத் தத்துவசாஸ்திரி. நவீன ரஸாயன சாஸ்திரத்துக்கு இவன்தான் பிதா.

லாக்: கி. பி. கசூருஉ - கஎ0ச. ஓர் ஆங்கில மனோ தத்துவ சாஸ்திரி.

லாஸ் காஸஸ்: கி. பி ௧௭௬௬-௧௮௪௨. நப்போலியன் ஸெண்டு ஹெலேனு தீவில் சிறையாக வைக்கப்பட்ட காலத்தில் அவனோடு அனுசரனாக இருந்த பிரபு.

லூதர்: கி. பி. ௧௪௮௩ - ௧௫௪௬. ரோமன் கத்தோலிக் மதத்தைக் கண்டித்து, கிறிஸ்தவ மதத்தில் சில மாறுபாடுகள் உண்டாக்கிய தீரன். அவன் செய்த மாறுபாடுகளைச் சீர்திருத்தம் என்பார்கள். இவன் கொள்கையினருக்கும், ரோமன் கத்தோலிக் மதத்தைக் கண்டிக்கும் மற்றக் கிறிஸ்தவர்களுக்கும் பிராட்டெஸ்டாண்டுகள் என்றுபெயர். ரோமாபுரிப் போப்பின் தலைமையை அங்கீகரியாத கிறிஸ்தவக் கொள்கைகளுக்கெல்லாம் பிராட்டெஸ்டாண்டிஸம் என்ற பொதுப்பெயர் வழங்குகிறது.

வாத்திக்கான்: ரோமாபுரியில் கத்தோலிக் கிறிஸ்தவ மதாசாரியனாகிய போப் வசிக்கும் அரண்மனை.

வாஷிங்டன்: கி. பி. ௧௭௩௨ - ௧௭௯௯. அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சுதந்தரம் சம்பாதித்துக்கொடுத்த வீரன் பொய்மை சொல்லாதவன்.

வெஸ்லி: கி. பி. ௧௭௦௩ - ௧௭௯௧. இங்கிலாந்தில் கிறிஸ்தவ தர்மானுசரணையில் ஒரு நூதன பத்ததி ஏற்படுத்திய மகான். அந்தப் பத்ததிக்கு மெத்தோடிஸம்—ஒழுங்கு வழி—என்று பெயர்.

வேர்மோண்டு: அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒரு மாகாணம்.

வோதேன்: ஸாக்ஸோனிய, ஜெர்மானிய புராணங்களில் பேசப்படும் ஓர் வீரத் தெய்வம்.

ஜாரதுஷ்டிரன்: கி. மு. ஏழாவது நூற்றாண்டு. ஓர் பாரஸீக மகான்.

ஜெனேவா: ஸ்வித்ஸர்லாந்து நாட்டின் தலைநகர்.

ஜேஜே: கி. மு. ௩௫அ-௨௯0. ௫அ-ம் பக்கம் குறிப்பைப் பார்க்க.

ஷேக்ஸ்பியர்: கி. பி. க௫௬௪-க௬க௬. ஆங்கில நாடகக் கவி. ஆங்கிலக் கவிஞர்களுள் அக்கிரகண்ணியன்.

ஸாக்ஸோனியர்: இங்கிலீஷ் ஜாதியாரின் மூல ஜாதி.

ஸாலமன்: கி. மு. க000 யூத அரசன். மகா புத்திமான் என்று ஐதிகம். பால்மீரா என்ற குறிப்பின் கீழும் பார்க்க. முகம்மதியர் இவனை ஸுலைமான் என்று சொல்லுவார்கள். பைபிளில் பழமொழிகளும் கீதமும் இவன் பாடியவை.

ஸீப்பியோ: கி. மு. ௨௩௪-க௮௩. ரோமாபுரியின் புகழ்பெற்ற யுத்தவீரன். அன்னிபாலன் என்ற இணையில்லாத போர்வீரனை வென்றவன்.

ஸேஸர்: கி. மு. க00-௪௪. ரோமாபுரியில் ராஜ்ஜியப் புறம்ச்சி உண்டாக்கி ஏகாதிபத்தியம் ஏற்படுத்திய வீரன். சாம்பராயிக ஞானத்தில் இவனுக்கு மிஞ்சினவர் இல்லையாம். தவிர இவன் பெரிய வாக்மியாயும் ஆசிரியனாயும் இருந்தான். த்ஸார், கைஸர், முதலிய சக்ரவர்த்திகளின் பெயரெல்லாம் இவன் பெயரினின்றே எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஸோக்ராத்தன்: கி. பி. ௪௭0-௪00. பிளாத்தனுடைய குரு. பெரிய மகான். அதேனிய ராஜாங்கமானது அவனைத் தர்மவிரோதி என்று தீர்மானித்து, அவனுக்கு

விஷம் சாப்பிட்டு இறக்கவேண்டும் என்று உத்தரவிட்டது. சிறையினின்று தப்பித்துக்கொள்ள அவனுடைய நண்பர்களும் சிஷியர்களும் எல்லா ஏற்பாடுகளும் செய்துவைத்தும், அரசாங்கத்தின் கட்டளையை மீறுவது அதர்மம் என்று சொல்லிவிட்டு விஷமே சாப்பிட்டு இறந்தான். சாகிறவரையில் வருமவர்களோடெல்லாம் தர்ம விசாரணைகள் செய்துகொண்டே இருந்தான். பிளாத்தன் எழுதிய நூல்களனைத்தும் சம்பாஷணைகளாகவே எழுதப்பட்டுள்ளன. அவைகள் ஒவ்வொன்றிலும் ஸொக்ராத்தன்தான் பிரதான சம்பாஷகன்.

ஸ்காந்தேர்பேர்க்கு: கி. பி. கசஉ௩-கூஎ. ஒரு ஆல்பானியப் பிரபுவின் மகன். ஆல்பானியர் துருக்கரிடம் தோற்றுப்போய்விட்டபோது, சுல்தானுன உ-வது அமுராத்தினிடம் பிணையாகக் கொடுக்கப்பட்டவர்களுள் ஒருவன். பிறகு சுதேசம் வந்து துருக்கருடன் மகா சீர்த்தியோடு உஉ வருஷம் கடும்போர் புரிந்தான்.

ஸ்தோயிகன்: ௱அ-ம் பக்கம் குறிப்பைப் பார்க்க.

ஸ்பார்த்தர்: கிரேசில் ஒருபாகமான லகேதேமோனியாவில் அதிகாரம் வகித்த ஜாதி. இவர்கள் கி. மு. ௩௩கூ க்குமுன் தரைச்சண்டையில் மிகச் சமர்த்தர் என்று பேரெடுத்திருந்தார்கள்.

ஸ்வேதன்பர்க்கு: கி. பி. ககூஅஅ-கஎஎஉ. ஸ்வேதன் நாட்டு யோகி. சித்தன்.

ஹட்டன்: கி. பி. கஎ௩எ-கஅஉ௩. ஓர் ஆங்கிலக் கணித சாஸ்திரி.

## கம்ப நிலயம் வெளிப்படுத்தியிருக்கும் நூல்கள்.

க. சந்திரகுப்த சக்ரவர்த்தி (வ. வெ. ஸு. ஐயர்.) 0—அ—0
உ. மங்கையர்க்கரசியின் காதல் முதலிய
கதைகள் (ஷை) ... ... ... 0—க0—0
ங. ரவீந்திரடாகூர் சிறு கதைகள் முதல் தொகுதி 0—கஉ—0
ச. ஷை உ-ம் தொகுதி ... ... 0—கஉ—0
ரு. ஷை ங-ம் தொகுதி (ஸ்ரீ. ஸ்ரீ.) 0—கஉ—0
சு. குப்பன் பித்தலாட்டங்கள் (ஷை.) 0—சு—0
எ. புக்கர் வாஷிங்டன் சரித்திரம் (வ. வெ. ஸு.) 0—அ—0
அ. வால்மீகி விஜயம் (மஹேசகுமார சர்மா) ... க—0—0
கூ. தன்னம்பிக்கை (வ. வெ. ஸு.) ... ... 0—அ—0
க0. கம்பராமாயண பாலகண்டச்சுருக்கம் (முகவுரை
அகராதி முதலியன சகிதம்) ... ரூ உ—சு—0

### இதர பதிப்புகள்.

ஆனந்த மடம் ... ... ... ... ... 0—கஉ—0
மகாத்மா கந்தி ... ... ... ... ... க—0—0
வேதாந்த ரகஸியம் ... ... ... ... க—அ—0
ராமகிருஷ்ண விஜயம் ... ... ... ... க—ச—0
கர்மா, ஸ்ரீ. அரவிந்த கோஷ் எழுதிய வியாசத்தின்
மொழி பெயர்ப்பு ... ... ... ... 0—ச—0
An English Translation of the Kural
by V. V. S. Aiyar ... ... Rs 2—4—0

"கம்ப நிலயம்," புதுச்சேரி.